...lkuli Bra... ...ary

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 27 ஆவணி 25 துல்கஜ் 24 இதழ் 212
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10 9=1985

## திடீர்ப் புரட்சி தோல்வி

(பாங்கொக்)

தாய்லாந்தில், திடீர்ப்புரட்சி முறியடிக்கப்பட்டுள்ளது!

பத்துமணி நேர ஆட்சிநடத்திய புரட்சிக் குழுவினர் நேற்று சரணடைந்துவிட்டனர்!

நேற்று அதிகாலை புரட்சி சதியொன்றின் மூலம் தாய்லாந்து அரசாங்கத்தைக் கைப்பற்ற மேற்படி புரட்சிக்குழு முயற்சி செய்தது.

கடந்த 50 வருடங்களுக்குள் நடைபெற்ற 15வது சதிப் புரட்சி இதுவெனக் கூறப்படுகிறது. இச்சதிமுயற்சியில் 500 போர் வீரர்களும், ஒரு டாங்கியும் ஈடுபடுத்தப் பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

(முன்வந்த செய்தி மூன்றும் பக்கம்)

## பிரபாகரனைக் கண்டுபிடிக்க ஆயுதப்படை நடவடிக்கை

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மகாணங்களில் தற்போது நடைபெற்று வரும் சம்பவங்களுக்கு பிரபாகரன் தலைமையிலான தமிழீழ விடுதலைப்புலிகளே காரணம் என்று அரசதரப்பில் தெரிவிக்

(5 ம் பக்கம் பார்க்க)

# நிலாவெளி பீரங்கித் தாக்குதல்!

# அகதிகள்பலர்ராமேஸ்வரத்தில்!

(இ. பெஞ்சமின்)

திருகோணமலை மாவட்டத்தில் அண்மைக் காலங்களில் இடம் பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து அகதிகளானவர்களில் பலர் சில படகுகளில் நேற்று இராமேஸ்வரம் சென்றடைந்துள்ளனர்.

### பீரங்கித் தாக்குதல்

நிலைமை இவ்வாறிருக்க நேற்றுப் பிற்பகல் நிலாவெளிக் கிராமத்தில் இரு பீரங்கி வண்டிகள் சகிதம் சென்ற ஆயுதப்படையினர் தாக்குதல் நடாத்தியதில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வயல் வெளிப் பகுதியில் 12 ஆயிரம் தமிழ் அகதிகளைக் கொண்ட முகாமுக்கு சூழவுள்ள பகுதியில் இத்திடீர்த் தாக்குதல் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. பீரங்கிக் குண்டுகளின் தாக்குதலால் முஸ்லிம் நபர் ஒருவர் கொல்லப்பட்டதாகவும் அதேஇனத்தைச் சேர்ந்த பெண் ஆசிரியை ஒருவர் படுகாயம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது மேலும் இரு முஸ்லிம்களும் காயமடைந்தனர்.

சாம்பல்தீவு, பெரியகுளம் பௌத்த விகாரைக்கு அருகே நேற்று நண்பகல் இரு குண்டு வெடிச்சத்தமும் துப்பாக்கி வெடிச் சத்தங்களும் கேட்டன இதனைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் காட்டுக்குள் தஞ்சமடைந்தள்ளனர்.

முருகபுரி 3ம் கட்டைப் பகுதியில் எஞ்சியிருந்த பல வீடுகளும் நேற்று எரிக்கப்பட்டன.

மேற்படி சம்பவங்கள் தொடர்பாக அச்சமடைந்திருக்கும் மக்களுக்கு உடனடியாக பாதுகாப்பளிக்குமாறு திருகோணமலை சட்டத்தரணிகள்' பிரஜைகள் குழுவினர் ஜனாதிபதிக்கும் பாதுகாப்பு அமைச்சருக்கும் அவசர தந்திகள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர். (மா)

## ஊரிக்காட்டில் பல வீடுகள் சேதம்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவ முகாமின் மேற்குத் திசையில் உள்ள வீடுகள் வெடிவைத்துத் தகர்க்கப்பட்டதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

ஊரிக்காடு இராணுவ முகாமிலிருந்து சுமார் 100 யார் தூரத்தில் உள்ள வீடுகளே இவ்வாறு தகர்க்கப்பட்டவையாகும்.

இப்பகுதி மக்களில் பலர் ஏற்கனவே வீடுகளை விட்டு வெளியேறி இருந்தனர் என்றும் வீடுகள் வெடிவைத்த சம்பவத்தை அடுத்து முழு அளவில் மக்கள் இப்பகுதியை விட்டு வெளியேறி விட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## 4பேர் மர்ம மறைவு

(வவுனியா)

கிளிநொச்சியைச் சேர்ந்த லொறியொன்று நால்வருடன் காணமல் போய்விட்டதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

(5-ம் பக்கம் பார்க்க)

## பொலிசார் ரோந்து: 2 இளைஞர்கள் பலி!

(மட்டக்களப்பு)

ரோந்து சுற்றிச்சென்ற அதிரடிப் பொலிசாரைக் கண்ட இரு இளைஞர்கள் 'சயனைட்' விழுங்கி மரணமானார்கள்!

மட்டக்களப்புப் புகையிரத நிலைய வீதியில் நேற்றுக் காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

மேற்குறிப்பிட்ட வீதி வழியாக அதிரடிப் பொலிசார் வாகனங்களில் ரோந்துசென்றதாகவும், அவ்வீதியால் வந்து கொண்டிருந்த இரு இளைஞர்களில் ஒருவர் அவ்விடத்திலேயே 'சயனைட்' விழுங்கி மரணமானதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மற்ற இளைஞர் அண்மையில் உள்ள கராஜ் ஒன்றுக்குள் புகுந்தபொழுது அக்கராஜ் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவருக்குரியதெனத் தெரியவந்ததும் அவ்விளைஞரும் 'சயனைட்' விழுங்கி மரணமானதாகவும் கூறப்படுகிறது

குறிப்பிட்ட இளைஞர்களின் சடலங்கள் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டன

நேற்று பிற்பகல்வரை இரு சடலங்களும் அடையாளம் காணப்படாததால் பொலிசார் எடுத்துச் சென்று எரித்துவிட்டதாகவும், இருவரும் சுமார் இருபதுவயது உடையவர்கள் என்றும்தெரிவிக்கப்பட்டது.

## ஈழதேசியவிடுதலைமுன்னணி இன்று கூடுகிறது

(சென்னை)

ஈழதேசிய விடுதலை முன்னணி இன்று சென்னையில் சந்தித்து முக்கிய விஷயங்கள் பற்றி ஆராயும்.

இலங்கை இனப்பிரச்னைக்கு தீர்வு காண திம்பு சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்வதற்கு முன் நடவடிக்கையாக தமிழ்ப்போராளிகள் குழு இந்தியப் பிரதமர் திரு ராஜீவ் காந்தியை சந்திக்க வேண்டும் என்பதில் இந்திய அரசு தீவிரம் காட்டுவதால் எழுந்திருக்கும் நிலமைகுறித்து இன்றைய சந்திப்பின் போது ஆராயப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுடில்லியில் தயாரிக்கப்பட்ட நகல்திட்டம்பற்றி இந்த முன்னணி ஏற்கனவே 2 3 தடவைகூடி ஆலோசனை நடத்தியது தெரிந்ததே. (து)

## ஆசிரியர் மர்ம மரணம்!

(யாழ்ப்பாணம்)

கண்டியில் உள்ள ஹோட்டல் ஒன்றில் மயக்க நிலையில் காணப்பட்ட யாழ்ப்பாணத்

(5ம் பக்கம் பார்க்க)

## "காருக்குள் இருந்த ஒருவர் ஆலாலுக்கு காலில்சுகமில்லை நடக்கமாட்டார் என்றார்"

### 'தர்மர்' மரணவிசாரணையில் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

'காரின் முன் ஆசனத்தில் இருந்த ஆலாலசுந்தரத்திடம் 'ஏன் இங்கே இருக்கிறீர்கள் வீட்டுக்குள் வந்து இருங்கள்' என்று நான் சொன்னேன் அதற்கு அவர் ஒன்றும் சொல்லவில்லை காருக்குள் இருந்த ஒருவர் அவருக்குகாலில் சுகமில்லை நடக்கமாட்டார் என்றார். இருட்டாக இருந்தபடியால், அவர்களை எனக்குத் தெரியவில்லை'

மானிப்பாய் முன்னாள் எம். பி. திரு வி. தர்மலிங்கத்தின் மரணவிசாரணையில் அவர் மனைவி சரஸ்வதி தர்ம

(8-ம் பக்கம் பார்க்க)

## "ஆலாலுவின் சடலத்தடியில் கண்டெடுத்த கடிதத்தை பின்னர் காணவில்லை"

### சகோதரன் சாட்சியம்

(க. யோகநாதன்)

"ஆலால் அண்ணரின் சடலத்தின் வலது பக்கத்தில் ஒரு கடிதம் கிடந்தது. அதனை நான் வாசித்துப் பார்க்கவில்லை சடலத்தைத் தூக்கும்போது அக்கடிதத்தை எடுத்து என் சட்டைப் பையில் வைத்தேன். பின் வீட்டிற்கு வந்தபோது அக்கடிதத்தை ஒருவரிடம் கொடுத்தேன். அக்கடிதத்தைப் பின்னர் காணவில்லை"

முன்னாள் கோப்பாய் எம் பி. எம். ஆலாலசுந்தரத்தின் மரண விசாரணையில் சாட்சியமளித்த அவரின் ஒன்றுவிட்ட சகோதரர் வி. ஜெயபாலசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் திரு. சி. நாகராசா முன்னிலையில் நேற்றுக் காலை இம் மரணவிசாரணை நடைபெற்றது.

இறந்தவரின் நலனைக் கவனிக்க சட்டத்தரணிகள் ஆர். அசுவநாதன், கிருஷ்ணகுமார் சுப்பிரமணியம், ஜனாப் எம் இமாம் விசுவலிங்கம் ஆகியோர் ஆஜரானார்கள்.


கடிதம் படிக்கப்பட்டிருந்தது என்றும், அது ஒரு ருல்போட்ட 'புல்ஸ்காப்' பேப்பரில் எழுதப்பட்டிருந்ததென்றும் ஜெயபாலசிங்கம் கூறினார்.

இறந்தவரின் மனைவி யோகேஸ்வரி ஆலாலசுந்தரம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

"வீட்டில் நானும் கணவரும் 3 பிள்ளைகளும் இருந்தோம். இரவு 7-30 மணிக்கு

(8ம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதக் காட்சி



வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதமிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து யாழ் கச்சேரி பஸ் நிலையத்தில் நடைபெற்ற உண்ணாவிரதத்தின்போது காணப்பட்ட உருக்கமான காட்சி. (படம்: தேவா)

# [illegible] விளம்பரம்

## விற்பனைக்கு

ஊரெழு தெற்கு பலாலி றோட்டில் இருந்து கிழக்கே மூன்றாவது தோட்டக்காணி 17 பரப்பு செய்கை நிலம் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; சபாபதி இராசதுரை. ஊரெழு பிள்ளையார் கோவில் கிழக்கு ஒழுங்கை. 633

பாவித்த நல்ல நிலையிலுள்ள வீடியோ டெக் NV 7000 EN விற்பனைக்குள்ளது. விபரங்கட்கு: குணம் வீடியோ சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23665. 637

புதிய, பழைய ஆங்கில தட்டச்சு யந்திரம் விற்பனைக்குண்டு. தொடர்பு: நிர்வாகி சங்கர், J. E. C. மேல்மாடி, (சாந்தி சினிமா முன்பாக) 22, இராமையா செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 545

## தவறிவிட்டது

இல; 564313350 V க பாலகிருஷ்ணன், நெல்லியான் சுழிபுரம் அடையாள அட்டையும் பஸ் சீசனும் 6-9-85 தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்டிருக்கும் விலாசத்தில் ஒப்படைக்கவும்! தகுந்த சன்மானம் வழங்கப்படும். 641

## கல்வி

Radio and Electronic Engineering. சனி-ஞாயிறு வகுப்புக்கள். ஆண், பெண் ஆகிய இரு சாராரும் பயிலலாம். ஆரம்பம் 14-09-85 சனி காலை 9 மணிக்கு முன்கூட்டியே விசாரணை செய்யவும். தொடர்புகள்: பொறியியல் கல்வி நிலையம், சாந்தி சினிமா அருகாமை, 22, ராமையா செட்டியார் லேன், யாழ்ப்பாணம். 635

## தேவை

தெல்லிப்பழையில் அமைந்துள்ள எமது பார்மஸிக்கு விற்பனையில் அனுபவமிக்க பெண்கள் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. நேர் முகப்பரீட்சைக்கு இம்மாதம் 12ம் திகதி சமுகமளிக்கவும். விலாசம்: 10, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம். 627

### ஊறணியில் உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)

சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து ஊறணி புனித அந்தோனியார் ஆலய முன்றலிலும் ஒருநாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்பட்டது.

ஊறணி பொது மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த உண்ணாவிரதத்தில் ஆண்கள், பெண்கள், இளைஞர், யுவதிகள், சிறுவர், சிறுமியர் எல்லோருமாக சுமார் 1000 பேர் வரையில் கலந்து கொண்டனர்.

# 31-ம் நாள் நினைவஞ்சலி

அமரர் செல்லத்துரை சபாரெத்தினம்

(ஓய்வுபெற்ற நில அளவை அதிகாரி)



தோற்றம்:
09-07-1903

மறைவு:
12-08-1985

"எமது குடும்பத்தின் குலவிளக்காய் ஒளி பரப்பி, சிவபதமடைந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் மற்றும் உதவிபுரிந்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், 11 09-85 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையில் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்."

மனைவி, மக்கள், மருமக்கள். பேரப்பிள்ளைகள்.

"வசந்த வாசா, ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை. 629

ஓம்

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் குரோதன வருடம் ஆவணி மாதம் 26ந் திகதி (11-09-85) புதன்கிழமை பகல் 1-30 மணி தொடக்கம் 2-45 மணி வரையிலும் வரும் சுபமுகூர்த்தத்தில்.

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறை செல்வன்<br>**மகேந்திரன்**<br>(பொறியியலாளர், நைஜீரியா)<br>அவர்களுக்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**நிரஞ்சனா,** B. Sc.<br>அவர்களுக்கும் |

யாழ்ப்பாணம், ரசிக ரஞ்சன சபா மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| திரு. திருமதி<br>இரத்தினம்.<br>(இளைப்பாறிய ஆசிரியர்கள்)<br>"சிவகிரி",<br>ஏழாலை மத்தி,<br>ஏழாலை. | திரு. திருமதி<br>வல்லிபுரம்,<br>(சட்டத்தரணி)<br>37/1, செட்டித்தெருலேன்,<br>நல்லூர். |

628

### அஞ்சலிப் பிரசுரம்

(பண்டத்தரிப்பு)

"மானிப்பாய் தொகுதியின் மக்கள் உயர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும் அருந்தொண்டாற்றி மறைந்த எமது தலைவர் அமரர் வி. தர்மலிங்கம் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகின்றோம்" என்று இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் அகால மரணமடைந்த மானிப்பாய் தொகுதி முன்னாள் எம். பி; திரு. வி. தர்மலிங்கத்தின் மறைவை யொட்டி வெளியிட்டுள்ள அஞ்சலிப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளனர்.

# முதலாவது பிறந்ததின வாழ்த்து

செல்வி தார்ணி



பிரான்ஸிலிருக்கும் திரு. தயாளன், திருமதி தேவகி தயாளன் தம்பதிகளின் செல்வப் புதல்வி தார்ணி தனது முதலாவது பிறந்ததினத்தை (இன்று) 10-9-85-ல் தனது பெற்றோருடன் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, ஜெர்மனி பெரியம்மாமார், கொழும்பு பெரியம்மா, பெரியப்பா, ஜெர்மன் மாமா (கண்ணன்) மாமாமார், மாமிமார், மச்சான்மார் சர்மிளா துஷியந்தி, நிவேதிகா-தம்பிகஜன் மற்றும் உற்ருர், உறவினரும் பல்கலைகளும் கற்று சீர்-சிறப்புடன் ஸ்ரீ துர்க்காதேவியின் அருளாசியுடன் பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்

வி. இராசரட்ணம்.

3-ம் கட்டை. கொக்குவில். 612

சிமெந்து தொழிற்சாலையில்
வேலை செய்தோருக்கு

# முக்கிய அறிவித்தல்

சகல சங்கங்களினூடாகவும் வேலைவங்கி ஊடாகவும் காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலையில் 1981-ம் ஆண்டு ஆனி மாதத்திற்குப்பின் வேலைசெய்தோருக்கு சம்பள நிர்ணய சபையினுல் தீர்மானிக்கப்பட்ட சம்பள அடைப்படையில் வருமதியாகவுள்ள பணம் கொடுபட வேண்டுமாதலால் வருமதியாகவுள்ள பணத்தை பெற்றுத்தரும்படி கோரி கணக்கு விபரத்தை உதவித் தொழில் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். இக்கணக்கு விபரத்தை சிறந்த அனுபவமுள்ளவர்கள் மூலம் தயாரித்துத் தருவதற்கு தொழிற்சாலை இலக்கம், வேலை செய்த நாள், மேலதிக நேரம், பிரிவு ஆகிய விபரங்களுடன் எழுபது ரூபாவும் (ரூ. 70-/) கொடுபடல் வேண்டும்.

க. கைலாசபிள்ளை.

7-ம் கட்டை ஒழுங்கை;
மல்லாகம். 636

உ
சிவமயம்

# திருமண அழைப்பு

மணமகன்:

## செல்வன் கேதீஸ்வரன்

(விரிவுரையாளர், கூட்டுறவு பயிற்சி கலாசாலை, மன்னார்)

மணமகள்:

## செல்வி சிவசாந்தி

இடம்:
தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயம்

காலம்:
12-09-1985 வியாழக்கிழமை
நண்பகல் 10-00 — 12-00 வரை

வரவேற்பு:
14-09-1985 பிற்பகல் மணமகன் இல்லம்

உறவினர், நண்பர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

| | |
|---|---|
| திருமதி இ ஞானசுந்தரமும்<br>மகாலிங்கம் குடும்பத்தினரும்<br>யாமாச்சந்தி,<br>உடுவில் தெற்கு,<br>மானிப்பாய் | டாக்டர் இ கந்தையாவும்<br>பாரியாரும்,<br>கேணியடி,<br>குப்பிழான், ஏழாலை |

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் அனுப்பியிருந்தும் கிடைக்கப்பெறதவர்கள் இவ் அழைப்பிதழை ஏற்றுக்கொள்ளவும். (632)

உ

# திருமணத் திருமுகம்

அன்புடையீர்,

நிகழும் குரோதன வருடம் ஆவணித்திங்கள் 27 ம் நாள் (12-9-85) வியாழக்கிழமை காலை 8-45 மணியிலிருந்து 9-15 மணிக்குள் வரும் சுபமுகூர்த்தத்தில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறைசெல்வன்<br>**க. செல்வரத்தினம்**<br>ஆசிரியர்<br>(கணிதம் விசேடப்பயிற்சி)<br>பாண்டியன்குளம்<br>அரசினர் தமிழ் கலவன் பாடசாலை)<br>வவனிக்குளம் அவர்கட்கும் | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>**நந்தினி**<br>அவர்கட்கும் |

மணமகன் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் சமுகந்தந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்

தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| வி. கந்தசாமி,<br>இளைப்பாறிய ஆசிரியர்,<br>வாரியத்தனை.<br>கரவெட்டி மத்தி. கரவெட்டி. | சி. க. கந்தையா,<br>இளைப்பாறிய ஆசிரியர்,<br>"நந்தபவனம்",<br>ஆனைப்பந்தி. கரணவாய் வடக்கு<br>கரவெட்டி. |

(631)

# தாய்லாந்தில் திடீர்ப் புரட்சி:

# புரட்சிகுழு ஆட்சியைகைப்பற்றியது!

## மக்களை அமைதியாக இருக்குமாறு வேண்டுகோள்

(பாங்கொக்)

**தாய்லாந்தில் நேற்று அதிகாலை நடந்த திடீர்ப்புரட்சியில் புரட்சிக்குழு ஒன்று ஆட்சியை கைப்பற்றியுள்ளது.**

**முன்னாள் இராணுவத் தளபதியும் 1970ம் ஆண்டு துணைப் பிரதமராக பதவிவகித்தவருமான ஜெனரல் செமினு நக்கோன் தலைமையிலான புரட்சிக்குழுவே ஆட்சியைக் கைப்பற்றியதாக கூறப்படுகிறது.**

புரட்சிக்குழு ஆட்சியை கைப்பற்றிய சிறிது நேரத்தில் 'பாங்கொக்' வானொலியில் புரட்சிபற்றி அறிவிக்கப்பட்டதுடன் ஜெனரல் செமினு நக்கோனின் கையெழுத்திட்ட அறிக்கையும் வாசிக்கப்பட்டது

நாட்டின் பொருளாதார நிலையை கருத்திற்கொண்டும், தாய்லாந்தின் எதிர்கால வளர்ச்சியைக் கருதியுமே இந்த புரட்சி நடந்துள்ளது மக்கள் அமைதியாக இருந்து வழமையான அலுவல்களை கவனிக்குமாறும் அந்த வானொலி அறிக்கை தெரிவித்தது கட்டளைக்கு கீழ்படிய வேண்டும் இல்லையேல் விளைவுகளை எதிர்நோக்கவேண்டிவரும் என்றும் புரட்சிக்குழுவின் கையெழுத்திட்ட அந்த வானொலி அறிக்கை தெரிவித்தது.

தாய்லாந்தின்மன்னர், தென் தாய்லாந்துக்கும் பிரதமர் பின் சுலானந்தா இந்தோனேஷியாவுக்கும், பிரதம இராணுவத்தளபதி மேற்கு ஐரோப்பாவுக்கும் விஜயம் மேற்கொண்டிருந்த சமயமே இந்த திடீர்புரட்சி நடந்துள்ளது. எனவே பிரதமரும், இராணுவத் தளபதியும் நாடு திரும்ப மாட்டார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மன்னரின் தற்போதைய நிலைபற்றி எதுவும் தெரியவில்லை.

இதேவேளை அரச குடும்பத்தினர் அனைவரும் பாதுகாப்பு காரணங்களுக்காக புரட்சியாளரின் பாதுகாப்பில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது

புரட்சி நடைபெற்றசமயம் இரத்தக்களரி எதுவும் இடம் பெறவில்லை எனக் கூறப்படுகிறது. நாட்டின்நிர்வாகத்தை தமது கட்டுப்பாட்டில் கொண்டுவருவதற்காக புரட்சிப்படைகள் நாட்டின் அரச திணைக்களங்கள், வர்த்தகநிலையங்கள் ஆகியவற்றை தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் முயற்சியில் செயல்பட்டுக்கொண்டிருப்பதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டின் பாராளுமன்றம், அமைச்சரவை அரசியல் அமைப்புச்சட்டம் ஆகியவற்றை புதிய புரட்சியாளர்கள் இடைநிறுத்திவைத்துள்ளனர்.

கிழக்காசியாவிலுள்ள தாய்லாந்து நாடு பர்மா, மலேசியா, லாவோஸ், கம்பூச்சியா ஆகிய நாடுகளை எல்லையாகக் கொண்டது. கம்பூச்சிய அரசுக்கு எதிராக செயற்படும் கெரில்லா படையினர் தாய்லாந்தில் முகாம்கள் அமைத்து செயற்பட்டு வருவதும், இதனால் கம்பூச்சியாவில் நிலைகொண்டுள்ள வியட்னாமிய படைகளுக்கும் தாய்லாந்துப் படைகளுக்குமிடையில் அடிக்கடி எல்லைமோதல்கள் இடம் பெறுவதுக்குறிப்பிடத்தக்கது.

## உலகச் செய்திகள்

## இந்தியாவில் தேர்தலில் போட்டியிடும்———

# சுயேச்சை வேட்பாளர் இறந்தாலும் தேர்தல் இடம் பெறும்!

(புதுடில்லி)

தேர்தல் தொகுதியொன்றில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியில்லாத வேட்பாளர் ஒருவர் இறந்தால் அந்தத் தொகுதியில் இனிமேல் தேர்தல் ரத்து செய்யப்படமாட்டாது.

இதற்காக இந்திய அரசின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் [illegible]2-வது பிரிவுதிருத்தப்படவுள்ளது. இதற்காக ஜனாதிபதியின் அவசரச்சட்டம் ஒன்று நேற்று பிறப்பிக்கப்பட்டது.

இந்தியதேர்தல் முறைகளின்படி முன்னர்தேர்தல் தொகுதியொன்றில் போட்டியிடும் எந்தவொரு வேட்பாளர் இறந்தாலும் அந்த தொகுதியில் தேர்தல் நிறுத்தப்படும். ஆனால் புதிய சட்டத்தின்படி அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் வேட்பாளர் இறந்தால் மாத்திரமே தேர்தல் நிறுத்தப்படும் அதாவது போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் இறக்கும் பட்சத்திலும் அந்தந்த தொகுதியில் தேர்தல் நடைபெறும.

மக்கள் பிரதிநிதித்துவச்சட்டத்தின் 59-வது பிரிவு தவறுதலாக பயன்படுத்தப்பட்டு தேர்தலை தடுத்து நிறுத்துவதற்காக சில சுயேட்சை வேட்பாளர்களை கொலை செய்வதும் மரணப்படுக்கையிலுள்ளவர்கள் வேட்புமனுதாக்கல் செய்வதும் இடம் பெற்றதினால் இந்தமுறை கொண்டு வரப்பட்டுள்ளதாக இந்திய அரச அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

## சொந்த நலன்களுக்காக—

# அமெரிக்கா கொரியாவை பிரித்து வைத்திருக்கிறது!

## வடகொரியா குற்றச்சாட்டு

(லண்டன்)

அமெரிக்கா தமது சொந்த நலன்களுக்காக கொரிய தீபகற்பத்திலிருந்து தென்கொரியாவை பிரித்துவைத்திருக்கிறது என்று வடகொரியா குற்றம்சாட்டியுள்ளது.

வடகொரிய துணைப்பிரதமர் சொங் டுக்கே வெளியிட்டுள்ள அறிக்கையில் அமெரிக்கா மீது மேற்படி குற்றச்சாட்டை விடுத்தார்.

தற்போது பிரிந்திருக்கும் இரண்டு கொரியாக்களும் இணைய முற்படும்போது அமெரிக்கா அதற்கு தடையாக இருந்துவருகிறது என்று அவர் தெரிவித்தார்

முன்னர் ஒன்றாக இருந்த கொரியநாடு 1952ம் ஆண்டில் இடம்பெற்ற கொரிய யுத்தத்தின் பின்னர் வடகொரியா கம்யூனிச நாடாகவும், தென் கொரியா முதலாளித்துவ நாடாகவும் பிரிந்தது குறிப்பிடத்தக்கது.

## பெரஸ்காந்தியின் 25வது நினைவுதினம்

(புதுடில்லி)

இந்தியப் பிரதமர் திரு ராஜீவ்காந்தியின் தந்தையார் பெரஸ் காந்தியின் 25வது நினைவுதினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் புதுடில்லியில் கூட்டம் ஒன்று நடைபெற்றது

பெரோஸ் காந்தி ஒரு விடுதலை வீரர் மட்டுமல்ல பிறவியிலேயேஒரு தேசியவாதியாகவும், மிகச் சிறந்த பாராளுமன்ற உறுப்பினராகவும் திகழ்ந்தவர் என்று கூட்டத்தில் பேசிய விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் திரு. சிவராஜ் பாட்டீல் அவருக்கு புகழாரம் சூட்டினார்.

இந்தக் கூட்டத்தை அகில இந்திய பெரஸ் காந்தி நினைவு அமைப்பு ஏற்பாடு செய்தது.

## "தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு உதவவேண்டும்"

(சென்னை)

தமிழ்நாட்டில் வசிக்கும் ராஜஸ்தான் மக்கள் தமிழ் மக்களுடன் இணைந்து இந்த மாநிலத்தின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்ற வேண்டும் என்று மத்திய சிவில் விமான போக்குவரத்துத்துறை இணை அமைச்சர் திரு அசோக்கெலாட் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அவர் சென்னையில் வாழும் ராஜஸ்தான் மக்கள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

## ஆசிய கிரிக்கெட் சங்கம்; இலங்கை தலைமைநாடு

### அடுத்த ஏப்ரலில் 'ஆசிய பந்தயம்!

(கொழும்பு)

ஆசிய கிரிக்கெட் சங்கத்தின் தலைமை நாடாக இலங்கை தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதனையடுத்து இச்சங்கத்தின் தலைவராக மகாவலி அபிவிருத்தி அமைச்சரும், இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவருமான திரு. காமினி திஸநாயக்கா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் சிங்கப்பூரில் இச்சங்கத்தின் மகாநாடு இடம்பெற்றது. இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் இச்சங்கத்தில் இடம்பெறுகின்றன.

இதேவேளை அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் இலங்கையில் ஆசிய சாம்பியன் கிரிக்கெட் போட்டிகள் இடம்பெறவுள்ளன மேற்குறிப்பிட்ட நாடுகள் அனைத்தும் இப்போட்டிகளில் கலந்து கொள்கின்றன.

(கி)

# கிராம மட்டத்தில் தொடரும் உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச் சிறையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக உரும்பராய், சுதுமலை, இளவாலை ஆகிய பகுதிகளில் பரவலான உண்ணாவிரதப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

கிராமிய உழைப்பாளர் சங்கம், வறிய கூலி விவசாயிகள் தொழிலாளர் சங்கம் ஆகிய அமைப்புக்கள் கூட்டாக இணைந்து நடத்திய இவ்வுண்ணாவிரதங்களில், தொழிலாளர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்களும் பெருமளவில் கலந்து கொண்டார்கள்.

தொடர்ச்சியான இவ்வுண்ணாவிரதங்களில் அவ்வப்பகுதி பொது ஸ்தாபனங்களும், பல்கலைக்கழக மாணவ பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உண்ணாவிரதம் அனுஷ்டிப்பதின் நோக்கங்கள் பற்றி விரிவாகத் தெளிவுபடுத்தினர்.

# பலாலி பகுதியில் குடும்பங்கள் இடம்பெயர்வு

(மாவிட்டபுரம்)

பலாலி பகுதியில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலையால் அப்பகுதி மக்கள் பெரிதும் அச்சத்துடன் வாழ்வதாகவும், பல குடும்பங்கள் அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

பலாலி விமான நிலைய பகுதி இராணுவ முகாம் ஆகியவற்றை அடுத்துள்ள பகுதிகளில் வசித்து வந்த மக்களில் பெரும்பாலானவர்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளனர். சுமார் 50 குடும்பங்கள் வரை தொடர்ந்தும் அங்கேயே வசித்து வந்தனர். ஆனால் தற்சமயம் அங்கு ஏற்பட்ட பதற்ற நிலையால் மேலும் பலர் இடம்பெயர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது

பலாலி விமான நிலைய வாசலுக்கு அருகில் இருந்த பழமை வாய்ந்த பெரியதோர் கட்டிடம் ஆயுதப் படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டதாகவும், அச்சமயம் பலத்த சத்தத்துடன் அக்குண்டு வெடித்ததாகவும், இதனால் அருகாமையிலிருந்த வீடுகள் சிலவற்றுக்கும் சேதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

சில வாரங்களுக்கு முன்னர் இப்பகுதியிலுள்ள கொட்டில் வீடு தீக்கிரையாக்கப்பட்டதுடன் சைவ ஆலயம் ஒன்றும் குண்டு வைத்து தகர்க்கப்பட்டதாக கூறப்படுகிறது இதன் காரணமாக அப்பகுதி மக்கள் அச்சத்துடன் வாழவேண்டியுள்ளதாகவும், இதற்கு அஞ்சிய பலர் இடம்பெயர்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சோதிட ஆய்வு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை சோதிட ஆய்வு மன்றத்தில் கருத்தரங்குஒன்று இம்மாதம் 15-ம் திகதி காலை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. "சமய அனுஷ்டானங்களும், பஞ்சாங்கங்களும்" என்ற தலைப்பிலான இக்கருத்தரங்கில் பிரம்மஸ்ரீ ந. கந்தசாமிஐயர், திரு ஆ. காசிநாதன், பிரம்மஸ்ரீ எஸ். என். நடராஜஐயர், திரு வே. சின்னத்துரை உட்படப் பல சோதிடவியலாளர்கள் ஆய்வுரை நிகழ்த்துவர். மன்றத் தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் நா. சுப்பிரமணியஐயர் தலைமை தாங்குவார். (ஜெ)

**மணிவாக்கு**

பிறப்புக்கும் இறப்புக்கும் மாற்று மருந்தில்லை. இடைநேரத்தை இன்பமாகக் கழிப்பதே உசிதமான ஒரேவழி.

—ஜோர்ஜ் சன்டாயன்

# நமது நோக்கு

## குப்பை கொழிக்கும் தமிழர் தலைநகர்

தூரதேசத்தில் வாழ்ந்து வந்த ஒரு ஏழைக் குடும்பம் தனது ஒரேஒரு ஆண்பிள்ளை சாகும் தறுவாயில் வைத்தியத்தைக் கைவிட்டு டில்லி வந்து மகாத்மாகாந்தியின் காலைக்கழுவி அந்நீரைப் பருகினால் வருத்தம் குணமாகுமென முடிவுகட்டியது.

அப்போது ''சாகும் வரைக்கும் உண்ணாவிரதம்'' அநுட்டித்த மகாத்மா, அபாயநிலையில் இருந்தார். அவரை எவரும் காணமுடியாது வருபவர்களை எட்டத்தில் தடுக்க கயிறுகட்டி காவலாளர்கள் நிறுத்தப்பட்டனர்.

இவற்றையெல்லாம் சாதுரியமாகத்தாண்டிவந்த இப்பெற்றோர் தமது நோக்கத்தை - மகனுக்குரிய மருந்து-நிறைவேற்ற தண்ணீரைத் தயாராக்கினர். மகாத்மாவின் அந்தரங்க காரியதரிசிக்கு விடயம் புரிந்ததும் அதற்கேற்ற 'தடுப்பூசியை' வழங்கினர். இவ்வாறு தமது சுயசரிதையில் காந்தி குறிப்பிடுகிறார்.

விஞ்ஞான உலகம் இருண்டு கிடந்த போது, நோய்க்கு கிருமியே காரணமென்று உலகுக்கு உறுதி கூறியவர் லூயி பாஸ்ரெர் என்ற பிரெஞ்சு விஞ்ஞானி. எந்த நோய்க்கும் உரிய மருந்தைகண்டுபிடிப்பதற்கு இது மூலகாரணமாயிற்று.

இன்றும் எம்மிற்பலர் இந்தக் காலத்திலும், நாம் மேலே குறிப்பிட்ட பெற்றோர் போல் மூடநம்பிக்கைகளில் வாழ்கின்றனர். எனவே எமது சுற்றாடல் மட்டுமல்ல நகரத்திலோ கிராமத்திலோசுத்தம்பேணி சுகாதாரவாழ்வில் அக்கறை காட்டுவதில்லை.

கல்வியில் பெருமைபேசும் யாழ்ப்பாணத்தின தலைநகர் இன்று எவ்வாறிருக்கிறது?

கல்வியின் முக்கிய நோக்கம் சமூகம் முழுவதின் மேம்பட்ட வாழ்க்கைக்கு அடிகோலுவது. இதுவே சமூக நன்னடத்தை. இதில் நாம் கொஞ்சம் கட்டைதான்.

சமூக மனிதாபிமானம் இன்றுபோல் என்றும் பேசப்பட்டதா? எனவே தனிப்பட்டவர்கள் தங்கள் குப்பைகளத்தை வீட்டிலிருந்து கட்டி றோட்டில் குவிப்பதால்வீடோ நாடோ புனிதமாவதில்லை!

நல்லூர் மகோற்சவம் ஆரம்பமானதும் நகரத்தின் எல்லாச் சுற்றுப்புறங்களிலும் பந்தலும் பரிசுத்தமும் வருடாவருடக்காட்சிகள்.

இன்று பந்தல் போகட்டும். பரிசுத்தம் எங்கே?

இவ்வாற முடிவில் முடிவடையும் மகோற்சவம் வேலனைத் தேரிற் காணவரும் பக்தர் பட்டாளத்தை என்றும் காணாத வகையில் ஈர்க்கும் தன்மைது.

இந்தப் புனித தலம் குப்பையும் கூளமும் நிரம்பிவழியும் நகரில் சிறைப்பட்டிருப்பது தமிழர் கலாசாரத்தின் விசேட அம்சத்தை வற்புறுத்துகிறது.

வீட்டைப்பார், வேலனின் கோயில் போல் மிகப் புனிதமாகவிருக்கிறது. 25 நாள்விரதகாலம்வேறென்ன மாதிரி இருக்கவேண்டும்?

வீதி எவ்வாறு இருக்கிறது? இந்த வழிகளால், குப்பைக்குவியல்களுக்குஅஞ்சலி செலுத்தும் அங்கங்கள் குகனுக்கு உகந்தவையா?

தனது குறைகளை மட்டுமன்றி தனது சமூகம் நாடு அனைத்துலகும் மேம்பட்டு வாழவேண்டுமென்று பிரார்த்தனை செய்வதே கோவில் வழிபாட்டின் முக்கிய நோக்கமாகும்.

இந்தப் பரந்த ஆழமான பக்தி இன்றேல் திருமுருகாற்றுப்படை செயலிழந்து நிற்கும். இன்று அவ்வாறு நிற்கின்றது.

பக்தர்கோடிகளில் ஒரு சிறுபகுதி உள்ளத்தால் பொய்யாது நமது சமூகத்துக்கு விடுதலை வேண்டுமென்று கண்ணீர்விட்டால் அதன் விளைவென்னவென்று விஞ்ஞானிகளைக் கேட்க வேண்டிய அவசியமில்லை.

ஆனால் நிபந்தனை மிகக் கடினமானது.

''பலதரப்பட்ட மாற்றங்களின் அடியில் என்றும் மாறாத, அனைத்தையும் ஒன்றிணைக்கின்ற, உருவாக்குகின்ற, புத்துயிர் கொடுக்கின்ற ஒரு சக்தி என் உணர்வில் தட்டுப்படுகின்றது. இச் சக்தியை நான் இறைவன் என்று சொல்கின்றேன்''.

இவ்வித அனுபவத்தால் உந்தப்படும் மக்கள் நடத்தும் பிரார்த்தனையும் பஜனையும் நிச்சயம் நிலைமையை மாற்றிவைக்கும்.

''எல்லாம் அவன் செயல்'' என்ற மனச் சோம்பலுக்கும் பொறுப்புணர்வின்மைக்கும் நாம் குறிப்பிடும் கட்டாய நிபந்தனை உதவாது!

மாவீரன் ஒலிவர் கிறொம்வெல் சொன்னதுபோல், ''பிரார்த்தியுங்கள், பைபிளைப் படியுங்கள்; ஆனால் துவக்கு மருந்து ஈரமில்லாது காய்ந்திருக்கவேண்டும்''.

வேலன் தேரில் புறப்படமுன், ஒரு தீப்பெட்டி வாங்கி ஒவ்வொருவரும், மழைக்கு காத்திராது, காற்றின் உதவியின்றி தம்மாலியன்ற குப்பை குவியல்கள் அனைத்தையும் எரித்து சாம்பராக்குவது மிக மிக அவசரம்.

நகரத்தின் சுகநலத்துக்கு அவசர முதல்உதவி இது எரி அல்லது அகற்றிவிடு. அகற்றுவதற்கு வாகனமின்றேல் நகரில் எவ்வித வாகனத்துக்கும் இடமில்லை.

கோவில் சேவையில் ஈடுபட்டிருக்கும் சாரணர்கள் இதனை ஒவர்ரைமாகவும் ஏனைய தொண்டர்கள் இதனை அரசியல் கைங்கரியமாகவும் கருதி நகரைச் சுத்திசெய்வது எம்மைக் காக்கும் தெய்வத்துக்கு செலுத்தும் கருத்துடைய அஞ்சலியாகும். இதனை விளங்காத அறிவிலிகள் வானத்தில் வாழ்பவரே.

நெருப்பால் வரும் கேட்டுக்கு தீயணைக்கும் படை தயாராக இருப்பதுபோல் அழுக்கால் வரும் அபாயத்துக்கு அக்கினி பகவானை ஆவாகனம்செய்வது மிக அவசரமானது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவந்த குப்பை கூளம்புகைப்படலமாகமாறி வானை நோக்க எங்களைப் பீடித்திருக்கும் பல மூடப் பழக்கங்கள் அச்சுவாலையிலே சங்கமிக்கும்.

## 10 மைல் பாதயாத்திரை சென்று——

# கிளிநொச்சி உண்ணாவிரதம்

## குழந்தைகளும் கலந்துகொண்டனர்

(கிளிநொச்சி)

சிறைச்சாலைகளில் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொள்ளும் போராளிகளுக்கு ஆதரவாக கிளிநொச்சிமாவட்டத்தில்தொடர்ந்து ஊர்வலங்களும் உண்ணாவிரதங்களும் நடைபெற்று வருகிறது.

பல பொது அமைப்புகள் ஒருங்கிணைந்து மாபெரும் ஊர்வலம் ஒன்றையும் உண்ணாவிரதத்தையும் கிளிநொச்சியில் மேற்கொண்டனர்.

பெரும் திரளாக மாணவர்களும் இளைஞர், யுவதிகளும். தாய்மாரும், ஏராளமான குழந்தைகளும் கலந்துகொண்டனர்.

கோர வெயிலிலும் சுலோகங்கள் தாங்கிய ஊர்வலத்தினர் சுமார் பத்து மைல்தூரம் பாதயாத்திரை மேற்கொண்டு உண்ணாவிரத மைதானத்தை வந்தடைந்தது. உருக்கமாக இருந்தது.

# நிவாரணமின்றி அவதியுறும் திருமலை அகதிகள்!

## இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலையில் வன்முறைச் சம்பவங்களில் அகதிகள் முகாம்களில் தங்கியிருப்போருக்கு தகுந்த நிவாரண உதவிகள் வழங்குமாறுகோரி திருமலை இந்து இளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அகதிகள் முகாங்களில் தங்கியிருக்கும் தமிழ் அகதிகள் உணவு மற்றும் தகுந்த நிவாரண உதவிகள் இல்லாமல் மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. நிவாரண உதவிகள் வழங்குவோர் 393, திருஞான சம்பந்தர் வீதி. திருகோணமலை என்ற விலாசத்துக்கும், காசோலையாக அனுப்பிவைப்போர் 'சி- 79, பஜார் வீதி, இலங்கை வீதி என்ற விலாசத்துக்கும் அனுப்பிவைக்குமாறு இந்துஇளைஞர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது. (மா)

## கண்டிப்பது சுலபம் நடத்திமுடிப்பது கஷ்டம்

வட இலங்கை மருத்துவ சங்கம் யாழ்ப்பாணத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைப்பதற்காக ஒரு செயற்குழு நியமித்ததாகவும், அக்குழுவில் கலாநிதி T.கங்காதரன், கலாநிதி பிலிப்ஸ், கலாநிதி சேவியர், கலாநிதி நாகநாதன், கலாநிதி வாமதேவன் அங்கம் வகிக்கிறார்கள் என்றும் பத்திரிகை மூலம் அறிந்தேன். இந்த நன் நோக்கத்தை கேள்விப்பட்டதும் பலர் குறைந்த வாடகைக்கு கட்டிடங்களையும், காணிகளையும் வைத்தியசாலைகளையும் கொடுத்து ஊக்குவிப்பதற்கு முன்வந்தனரென்றும் ஒரு சிலர் கண்டித்தனரென்றும் அறிந்தேன்.

# மக்கள் கருத்து

கண்டிப்பது சுலபம் நடத்திமுடிப்பது கஷ்டம் ஒருவர் கண்டனம் எழுதுமுன் இந்த முயற்சி யாரால் தொடங்கப்படுகிறது. என்ன நோக்கத்துடன் தொடங்குகிறார்கள். பணம் சேகரிப்பதற்காகவா? அல்லது சேவை செய்வதற்காகவா தொடங்குகிறார்கள்? அவ்விதம் இதில் ஈடுபடுபவர்கள் செய்வார்களா? என்று ஆராய்ந்த பிறகு கண்டிக்க வேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் எனது மூதாதையர் புகன்ற ''தானும் செய்யமாட்டான். மற்றவர்களையும் செய்யவிடான்'' என்பது தான் நினைவுக்கு வருகிறது.

தனியார் மருத்துவக்கல்லூரி தொடங்க யோசிக்கு முன்பே தனியார் கல்லூரிகள், மூலை முடுக்குகள் எல்லாம் தனியார் கல்வி நிலையங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இவையெல்லாம் இலவசமாகவா நடத்துகிறார்கள்? திரு. செந்தில்குமாருக்கு இப்படிக் கல்லூரிகள் இயங்கி வருகின்றன என்பது தெரியாதா? இவர்கள் என்ன நோக்கத்துடன் நடத்துகிறார்கள் என்றும் தனியார் மருத்துவக்கல்லூரி என்ன நோக்கத்துடன் நடத்தப் போகிறார்கள் என்பதையும் அறியவில்லைப் போலும்.

தனியார் மருத்துவக்கல்லூரி மக்களின் பணத்தைக் கொண்டு மக்களுக்காகவே தங்களுக்கு லாபம் ஈட்டும் நோக்கம் இல்லாமல் தகுதி வாய்ந்த சேவை மனப்பான்மை உடையவர்களால் நடத்தப்படுமென்பதை இங்கு தெரிவிக்கின்றேன். இதற்கு அச்சங்கத்தின் விதி முறைகள் சான்று.

இக்கல்லூரிக்குத் தகுதி வாய்ந்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் நியமிக்கப்படுவர். மாணவர்களுக்குப் போதியவாசிகசாலை வசதியோ மற்றைய வசதிகளோ அளிக்கப்படும் என்றும் அறிந்தேன். இக்கல்லூரி கொழும்பு தனியார் மருத்துவக்கல்லூரி நடத்தப்படுவது போல நடத்தப்பட்டால் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பெரும் உதவியாக இருக்கும் பிறதேசங்களிலிருந்து விரிவுரையாளர்களையோ அல்லது இது சம்பந்தப்பட்டவர்களையோ அழைத்து விரிவுரைகள் கொடுப்பதற்கும் வசதியுண்டு. இவ்விதம் நடாத்தினால் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தை பிரித்தானிய மருத்துவக்கழகம் அங்கீகரிப்பதற்கு பெரும் உதவியாக இருக்குமென நம்புகிறேன்.

க. தேவராஜா
மூளாய் றோட்,
வட்டுக்கோட்டை.

## நெல்லியடி பஸ்நிலையத்தில் மின் கம்பத்தில் இருசடலங்கள்

(புலோலி, கரவெட்டி)

நெல்லியடி பஸ் நிலையத்தின் முன் உள்ள இருதந்திக்கம்பங்களுடன் இருவரின் சடலங்கள் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் நேற்றுக்காலை காணப்பட்டன.

10 போராளிகளைக் காட்டிக் கொடுத்து 50,000 சன்மானம் பெற்றார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரில் 'ரெலோ' இயக்கத்தினால் இம்மரண தண்டனை விதிக்கப்பட்டதாக சடலத்தில் கட்டப்பட்டிருந்த வாசகங்களில் குறிக்கப்பட்டிருந்தன.

## அருள் முருகா காத்தருள்வாய்

நல்லைப்பதிவாழ் நல்லூர்க் கந்தா
நாடிவரும் எம்துயர் தீர்ப்பாய் முருகா
நங்கையர் வள்ளி தெய்வானை மணாளா
நலமுடன் எம்மைக் காப்பாய் முருகா.

நல்லோர்க் கென்றும் துணையிருக்கும் கந்தா
நனவிலும் கனவிலும் நீயே என் முருகா
நல்லன நினைத்து தீயன மறக்க
நன்றே என்றும் அருள்புரி முருகா.

நல்லிலங்கை நாட்டின் நாலெட்டுத் திசையும்
நல்லூரான் உன்புகழ் நன்கே அறியும்
நல்லோரை ஏத்தி தீயோரை அழிக்கும்
அண்ணலே போற்றி அழகனே முருகா.

- மா. ஜமுனா

# வடமராட்சி ஆலயங்களில் நடைபெறும் உண்ணாவிரதம்

(புலோலி)

யாழ். பல்கலைக்கழக மாணவரும், அல்வாய் ஈச்சம் வலர் வரி அவையும், மக்கள் அவை வரி ஆலயத்திலும் நடை யும் இணைந்து சிறையில் பெற்ற உண்ணாவிரதத்தில் வாடும் தமிழ் இளைஞரின் விடு பெருந்திரளான பொதுமக்கள் தலைவர் கோரி வடமராட் கலந்து கொண்டு சிறையில் சிப் பகுதியில் நடத்தும் உண் வாடும் தமிழ் இளைஞர்களை ணாவிரதப் போராட்டத்தில் விடுதலை செய்ய இறை அனுக் பெருந்திரளான சிறுவர்கள், கிரகம் கிடைக்கவேண்டு இளைஞர் யுவதிகள் முதியோர் மெனப் பிரார்த்தித்தனர் கள் கலந்து வருகின்றனர். இறுதியாக நடைபெற்ற தெள் புலோலி உபய கதிர் கருத்தரங்கில் பலர் உரை காம முருகன் ஆலயத்திலும் யாற்றினர்கள். மாலி சந்தி விநாயகராலயத்தி

## கரைதுறைப்பற்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் முல்லைத்தீவு

## வெற்றுச்சாக்குக்கான கேள்விப்பத்திரம்

கரைதுறைப்பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்கம் 7000 (ஏழாயிரம்) வெற்றுச் சாக்குகளைக் கேள்விப்பத்திர மூலம் விற்பனை செய்யத் தீர்மானித்துள்ளது. இச்சாக்கு களுக்கான கேள்விகோர விரும்புவோர் 30-09-85-க்கு முன்னதாக, தலைவர், கரைதுறைப்பற்று ப நோ. கூ. சங்கம், முல்லைத்தீவு என்ற விலாசத்திற்குக் கேள்விப் பத்திர விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும் விண்ணப்பங்களை அனுப்பும்போது தபால் உறையின் இட துபக்க மேல்மூலையில் ''வெற்றுச்சாக்குகளுக்கான கேள்விப்பத்திரம்'' எனக் குறிப்பிடப்படுதல்வேண்டும். முடிவு திகதிக்குப்பின்னர் கிடைக்கும் விண்ணப்பங் கள் நிராகரிக்கப்படும். கேள்வி கோருவோர் மீளப் பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 250/- இச்சங் கத்தில் கட்டிப் பற்றுச்சிட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சனி, ஞாயிறு, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த காரியாலய நாட்களில் எமது முல்லைத்தீவுச் சாக்குக் களஞ்சியத்தில் வெற்றுச்சாக்குகளைப் பார்வை யிடலாம். சாக்கை நீங்கள் பார்வையிட்டே தரம் பிரித்து விலை நிர்ணயித்து எமக்கு அனுப்பவேண்டும். நீங்கள் அனுப்பிய விபரப்படியே தெரிவு நடைபெறும். தெரிவுசெய்யப்பட்டவர் சாக்கைப் பெறும்போது விலையிலோ, சாக்கிலோ எதுவித மாற்றமும் செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.

பொதுமுகாமையாளர்

கரைப்பற்று ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு. 30-08-1985. 640

## 4 பேர் மாமா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்ட அந்தலொறிக்கே இகதி நேர்ந்தது.

குறிப்பிட்ட லொறியில் அரு ணாசலம் சிவராசா, சொக்க லிங்கம், ஜெகதீஸ்வரன் ஆகி யோர் இருந்ததாகத் தெரிவிக் கப்படுகிறது. (மா)

## ஆனைக்கோட்டை

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கப்பட்டேன். எனது காற் சட்டையை கழட்டிய போது நான் சுவர்பக்கம் திரும்பி நின்று கொண்டேன். பின்பு அவர்கள் என்னை அடிக்க ஆரம் பித்தார்கள் முழங்கை, முழங் கால் பகுதிகளிலெல்லாம் தாக் கினார்கள் என் தொடைப் பகுதியை தாக்கிய போது எனக்கு மிகுந்த நோவேற்பட் டது. என்னால் நிற்கமுடியா மல் அமர்ந்து விட்டேன் பின் எனது பெனியனை எடுத்து உடலை மறைத்துக் கொண டேன் எனது நெஞ்சிலும், முதுகிலும் அடிபலமாக விழுந் தது.''

தண்ணீரை எவ்வாறு கொண்டு வந்தார் என்ற நீதி பரசரின் கேள்வியொன்றுக் குப் பதிலளிக்கையில் ''நான் கூறிய தாடிவளர்த்தவர், தண் ணீரை பாத்திரம் ஒன்றி லேயே கொண்டு வந்தார் அந்த தண்ணீரில் சவற்காரம் கலந்திருக்க வேண்டும் அதனால்தான் அது என் கண் களையும் எரியச்செய்தது' என்றார்.

ஈழவேந்தனைப்பற்றிக் குறிப் குறிப்பிட்ட, வண பிதா சிங்க ராயர், அவர் ஏற்கனவே இராணுவமுகாமிற்குப் பழக் கப்பட்டவர், எப்படியாவது அவர் தப்பித்துக் கொள்வார். என்னைப் பலவந்தப்படுத்தி அடித்தமையினாலேயே அவர் பெயரைக் குறிப்பிட்டேன்'' என்றும் தெரிவித்தார் விசா ரணை தொடர்ந்தது. (பி)

## மக்கள் பிரச்னைகள் பற்றி ஆராயும் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

'மக்கள் நடவடிக்கைக் குழு' வொன்றை அமைப்பதற்கான ஆரம்பக் கூட்டம் நாளை 11ம் திகதி மாலை 4 மணியளவில் ஜும்மா பள்ளிவாசல் வீதியில் உள்ள மலாயன் பென்ஷனர் கட்டிடத்தில் நடைபெறவிருக் கின்றது

பொதுமக்களைப் பாதிக்கும் பல விடயங்களைபற்றியும், உட னுக்குடன் நடவடிக்கை எடுப் பதுபற்றியும் இக்கூட்டத்தில் ஆராயப்படவிருக்கிறது.

வெலிக்கடைச் சிறையில் உண்ணாவிரதிகள் விடயம்பற் றியும் இக்கூட்டத்தில் ஆரா யப்படும். 'சட்டடே றிவியூ' பத்திரிகை ஆதரவில் இக்கூட் டம் நடைபெறவிருக்கிறது

## சடலம் கண்டுபிடிப்பு

(வவனியா)

எரிந்த குடிசைக்குள் பொசுங்கிய நிலையில் ஆணின் சடலம் ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

செட்டிகுளம் சின்னத்தம் பனை என்ற கிராமத்தில் இடம்பெற்ற சம்பவத்தில் குறித்த நபர் கொலைசெய்யப் பட்டு குடிசைக்குள் போடப் பட்டு எரிக்கப்பட்டிருக்கலாம் என கருதப்படுகின்றது.

இது இவ்வாறு இருக்க கடந்த மாதம் 23ம் திகதி சின்னத்தம்பனையிலிருந்து கட மைக்குச்சென்ற விசேட சேவை அலுவலர் திரு பூபால சிங்கத்தைக் காணவில்லை என்று புகார் கூறப்பட்டது. அதேநேரத்தில் சின்னத்தம் பனைக்கு அருகாமையில் உள்ள காடு ஒன்றுக்குள் அரைகுறை யாக எரிந்தநிலையில் சடலம் ஒன்று கிடக்க காணப்பட்ட தாக அப்பகுதி மக்கள் தெரி வித்துள்ளனர்.

## பிரபாகரனை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டுள்ளது.

நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பல பகு திகளிலிருந்து சிங்கள மக்களை வெளியேற்றுவதில் இந்த இயக்கமே பொறுப்பாக இருந் துள்ளதாக மேலும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் பிரபா கரனைக் கண்டுபிடிப்பதற்காக ஆயுதப்படையினர் தீவிர தேடு தல் நடவடிக்கையில் இறங்கி யுள்ளதாகவும் அரச தரப்பில் நேற்று தெரிவிக்கப்பட்டுள் ளது.

## ஆசிரியர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தைச் சேர்ந்த ஆசிரியர் ஒரு வர். கண்டி மருத்துவக் கல் லூரி ஆஸ்பத்திரியில் கடந்த மாதம் 21 ம் திகதி இறந்துள் ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த ஆசி ரியர் சகங்கைநாதனே இவ் வாறு இறந்தவராவார்

கடந்த மாதம் 15 ம் திகதி இவர் கண்டிக்குச் சென்ற தாகவும் அடையாள அட்டை கொண்டு சென்றதாகவும் இவ ரின் மரணம் பற்றி அவர் இறந்த பதினைந்து நாட்களின் பின்னர் பத்திரிகை வாயிலா கவே தெரிந்துகொள்ள முடிந் தது என்று இறந்தவரின் உற வினர் தெரிவித்துள்ளனர்.

## கயரோக நிலைய அடிக்கல் நாட்டுவிழா

(புலோலி)

இலங்கை கயரோக தேசிய நிவாரண சங்க வடமராட்சிக் கிளை அலுவலகத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா நாளை 11-ம் திகதி புதன்கிழமை நடைபெறுகின்றது

இவ்விழாவுக்கான ஒழுங்கு களைச் சங்கச்செயலாளர் திரு. வி. சேதுநாயகம் மேற் கொண்டுள்ளார்.

## பருத்தித்துறை நகரசபை

## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்—1986

1986-ம் ஆண்டுக்கான குத்தகைக்கு பகிரங்க ஏலவிற்பனை மூலம் குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்படும். 1985-09-26-ந் திகதி வியாழக்கிழமை அட்டவணையில் குறிப்பிட்ட குத்தகைகள் குறிப்பிட்ட இடங்களில் ஏலவிற்பனை ஆரம்பிக்கப்படும். குத்தகை ஏலத்தில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் குறிப்பிட்ட தொகைக்குரிய வைப்புப்பணம், படிவக்கட்டணம் ஆகியவற்றை 2985-09-25-ந் திகதி பிற்பகல் 1-00 மணிக்குப் பிந்தாமல் அலுவலகத்தில் செலுத்தி தங்கள் பெயர்களைப் பதிந்து கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது. மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

அட்டவணை

| | விபரம் | ஏலவிற்பனை வைப்பு | படிவக் கட்டணம் | ஏலவிற்பனை நேரம் | இடம் |
|---|---|---|---|---|---|
| 1. | மரக்கறிச் சந்தை | 1500/- | 100/- | முற்பகல் 10-00 மணி தொடக்கம் | மரக்கறிச் சந்தை வடக்கு வாசல் |
| 2. | வான் வண்டித்தாலை | 1500/- | 100/- | ,, | ,, |
| 3. | பஸ்நிலைய துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 250/- | 25/- | ,, | ,, |
| 4. | மீன்சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 250/- | 25/- | ,, | ,, |
| 5. | மீன் சந்தை | 1500/- | 100/- | முற்பகல் 11-00 மணி தொடக்கம் | மீன் சந்தை நுழைவாசல் |
| 6. | மாட்டிறைச்சிக் கடை இல. 1 | 1500/- | 100/- | ,, | ,, |
| 7. | மாட்டிறைச்சிக் கடை இல. 2 | 1500/- | 100/- | ,, | ,, |
| 8. | ஆட்டிறைச்சிக் கடை | 500/- | 50/- | ,, | ,, |

குறிப்பு:
(1) மாட்டிறைச்சிக் கடை இல. 1ம் 2ம் இவ்வருடம் ஒன்றாகச் சேர்த்துக் குத்த கைக்குக் கொடுக்கப்படும்.
(2) பஸ் நிலையத்திலும், மீன் சந்தையிலும் உள்ள துவிச்சக்கர வண்டிப் பாது காப்பு நிலையங்கள் இவ்வருடம் ஒன்றாகச் சேர்த்துக் குத்தகைக்குக் கொடுக்கப் படும்.

சு. பத்மநாதன்
செயலாளர்,
நகரசபை,
பருத்தித்துறை.

நகரசபை அலுவலகம்,
பருத்தித்துறை,
05-09-1985.

(639)

## மரண அறிவித்தல்

## சரவணை செல்லத்துரை

(பொன்ராசா)

ஏழாலையை வசிப்பிடமாகக் கொண்ட சரவணை செல்லத்துரை (பொன்ராசா) அகாலமரணமானார். அன்னார் வெள்ளையர் சரவணை சின்னம்மா அவர்களின் அருமைப் புதல்வரும், தர்மலிங்கம், அன்னரத்தினம், பரமேஸ்வரி, புஸ்பராணி ஆகியோரின் அருமைச் சகோதரரும், கதிரவேலு (ஈழநாடு), சின்னத்துரை, மயில்வாகனம் ஆகியோரின் மைத்துனரும், கருணாநந்தன் (ஏழாலை ம. வி.), சிவரூபன் (ஏழாலை ம. வி.) ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று செவ்வாய்கிழமை பி. ப. 2 மணிக்கு ஏழாலை மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 654

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
வள்ளியம்மை
தம்பிராசா

ஓய்வுபெற்ற
செங்குந்தா இந்துக்
கல்லூரி ஆசிரியை

தோற்றம்: 24-10-1908

மறைவு: 22-08-1984

திதி: 10-09-1985

அன்பின் தெய்வமே!
எம்மையெல்லாம் அன்பால் அரவணைத்தாயே,
மறைந்தும் எம்மைவிட்டு அகலாயே!
நினைவு கூருகிறோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(652) புங்குடுதீவு - 12.

# ‘அந்தத்’ தமிழகம் நோக்கி...

- தி. பொன்னம்பலவாணர்

‘தமிழ்நாடு’ என்றதும் கோபுரங்கள், கோயில்கள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், வேஷ்டிகள், நறுமணம் மிக்க ஊதுபத்திகள்;

— இவையே எம் கண்முன் வந்து நிற்கும்.

— ஆனால் இன்று நிலைமை மாறிவிட்டது. தமிழ்நாடு யாழ்ப்பாணத்துடன் ஒன்று சேர்ந்துவிட்ட ஒரு உணர்வே எம்மிடம் ஏற்படுகிறது

அந்த நாட்டை அதனுடனான சமய - கலாசாரத் தொடர்புகளுடன் ஒப்பிட்டு எடைபோடும் காலம் மாறிப் போய் அதனுடன் அரசியலில் ஒன்றி உறவாடும் ஒரு தன்மையே தற்போது மேலிட்டுள்ளது.

ஆனால் எம்போன்ற பலருக்கு ஆனி உத்தரத்தில் நடராஜரின் உற்சவகாலம், மதுரையில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கல்யாண உற்சவம் என்பவற்றில் கிடைக்கும் உன்னதமான தெய்வீக உணர்வு முற்றிலும் அற்றுப்போய்விடவில்லை

இதுபோன்ற சமய விழாக்களை இந்த நாட்டிலும் சரி, தமிழகத்திலும் சரி எப்போது மனந்திருப்தியாகக் காணலாமோ என்பது எம்மவர் பலரின் பெரும் ஏக்கமாகவுள்ளது.

இந்தநிலையில் எந்நேரமும் இடிபோசை போன்ற செய்திகளையே, குறிப்பாக பத்திரிகையாளன் என்ற முறையில் வேளைக்கு வேளை அந்த அவலத் தகவல்களைக் கேட்டுச் சலித்துவிட்ட எனக்கு எங்காவது சிறிதுகாலம் ஒரு பூரண மாறுதல் தேவைப்பட்டது

— தமிழகம் சென்றேன்

— எதனை எதிர்பார்த்தேனோ அது எனக்குப் பூரணமாகக் கிடைத்தது

— தமிழகத்தில் சென்னை, திருச்சி, மதுரை ஆகிய இடங்களிலேயே இலங்கையிலிருந்து அகதிகளாகச் சென்றோர் பெருமளவில் வாழ்கின்றார்கள். 1983 ஜூலையில் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக இவர்கள் உள்ளனர்.

தமிழகம் சென்றவர்களுக்கு அங்குள்ள முகாம்கள் ஒரு வரப்பிரசாதமாகவே உள்ளன என்பது தெரியவந்தது

இலங்கை அகதிகளுக்கு உணவு, உடை, மருத்துவம், குடியிருப்பு போன்ற வசதிகள் ஏறத்தாழப் போதியளவில் வழங்கப்பட்டு வருகின்றன இவற்றுக்கு மேலாக அவர்களுக்கு சுயவேலை வாய்ப்பைத் தேடிக் கொடுக்கும் ஒரு திட்டத்தையும் தமிழக அரசு ஆரம்பித்துள்ளது இத்திட்டம் அவர்களுக்கு ஒரு பெருந் துணை

## மரணத்தின் விளிம்பில் (1)

## சென்றோருக்கு தமிழக

## அகதிமுகாம்கள் ஒரு

## வரப்பிரசாதம்!

இவர்கள் தவிர மன்னார் போன்ற இடங்களில் இருந்து அகதிகளாக வந்தவர்களும் அண்மைக்காலங்களில் அதிகமாகக் காணப்படுகின்றனர்

இவர்கள் விடயத்தில் தமிழக அரசு போதிய கவனம் எடுக்கின்றதென்பதில் எதுவித சந்தேகமுமில்லை

இந்த அகதிகளில் ஒருவரை முற்றிலும் எதிர்பாராதவிதமாக பஸ்ஸில் சந்திக்க நேர்ந்தது அவரிடமிருந்து கிடைத்த தகவல்களின்படி வாழ்வழியற்ற மரணத்தின் விளிம்பில்

யாகவுள்ளது.

இலங்கை அகதிகளுக்கு ஒரு விசேட ‘பாஸ்’ வழங்கப்பட்டுள்ளது. அப்பாஸ் மூலம் பஸ்ஸிலோ, ரயிலிலோ இவர்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம்.

அப்பாஸ் மூலம் இராமேஸ்வரத்திலிருந்து சிதம்பரம் ஆனி உத்தர தரிசனத்துக்கு வந்திருந்த இருவரைச் சிதம்பரத்தில் சந்தித்தேன்;

(தொடரும்)

# வடபகுதி நிலைமை சீரானதும் தெல்லிப்பழை புற்றுநோய் சிகிச்சை நிலையம் முழுமையாக இயங்கும்!

(மாவிட்டபுரம்)

வடபகுதி நிலைமைகள் வழமைக்கு திரும்பியவுடன் புற்றுநோய் சிகிச்சை நிலையம் இயங்கவும் நிரந்தரமான சிகிச்சை நிபுணர் ஒருவரை நியமிக்கவும் தாம் நடவடிக்கை எடுப்பதாக சுகாதார அமைச்சர் திரு.ரஞ்சித் அத்தபத்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரி கமிட்டிக்கு உறுதியளித்துள்ளார்.

தெல்லிப்பழையில் அமைக்கப்பட்ட புற்றுநோய் சிகிச்சை நிலையத்துக்கு புற்றுநோய் சிகிச்சை நிபுணர் ஒருவரை மாதம் ஒருமுறையாவது அனுப்பிவைக்கவும். இங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்ட கோபால் யூனிட்டை திருப்பி ஒப்படைக்கும் படியும் கோரி தெல்லிப்பழை ஆஸ்பத்திரி கமிட்டியின் தலைவர் திரு ஈ. சபாரத்தினம் சுகாதார அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இதற்கு பதில் அளித்து அமைச்சர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தெல்லிப்பழை வைத்தியசாலையில் இருந்து கோபால் யூனிட் எனது பணிப்பின் மீதுதான் மகரகமவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது இந்த யூனிட் இங்கிருந்தால் தேவையற்ற பாவனைக்கு இடம் அளிக்கப்படும் என்று எனக்கு கிடைத்த தகவல் ஒன்றையடுத்தே எடுத்துச் செல்லப்பட்டது திரும்பியபின் மீண்டும் இவ்யூனிட்டை அங்கு அமைக்க நடவடிக்கை எடுப்பேன்.

வைத்தியநிபுணர் ஒருவரை நியமிக்க தான் கோரினேன். ஆனால் எவரும் அவ்விதம் வரவிரும்பவில்லை மகரமவில் கடமையாற்றும் நிபுணர்கள் கூட வர அச்சம் கொண்டுள்ளனர், ஆகவே நிலைமைகள் வழமைக்கு திரும்பியதும் ஒரு நிபுணரை நிரந்தரமாக நியமிக்க நடவடிக்கை எடுப்பேன்.

போக்குவரத்துப் பிரச்னைகளால் வடபகுதி நோயாளர்கள் மகரகமவுக்கு வருவதற்கு தயக்கம் காட்டுவதையிட்டுக் கவலையடைவதாகவும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மூளாய்கூட்டுறவு ஆஸ்பத்திரி மூடப்படமாட்டாது

(எம். ரி. சந்திரகுமார்)

“மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை தொடர்ந்தும் செயற்படும் வைத்தியசாலையின் செயற்பாட்டில் எவ்வித பாதிப்புமில்லை. டாக்டர்கள், மருந்து வகைகள் போதியளவில் இல்லை என காரணம் காட்டி எச்சமயத்திலும் மூடப்படலாம் என அண்மையில் வெளிவந்த செய்திகள் முற்றிலும் தவறானவை

மூடப்பட்டால் இங்கு தொழில்புரியும் 52 ஊழியர்களும் வேலை இழக்கவேண்டிய நிலைக்கு ஆளாகுவதோடு பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுத்தும் சகல மருத்துவ வசதிகளும் போதியளவு மருந்துகளுமுள்ள இவ்வைத்தியசாலையில் 4 தகுதிவாய்ந்த டாக்டர்கள் சேவையாற்றுகிறார்கள் என்பதை” குறிப்பிட விரும்புகிறேன்.

இவ்வாறு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைத் தலைவர் திரு எஸ் சிவகுரு ‘ஈழநாடு’க்கு அளித்த பேட்டியொன்றில் குறிப்பிட்டார்.

‘1936ம் ஆண்டு தொடக்கம் இவ்வைத்தியசாலை மக்களுக்கு சிறந்த சேவையாற்றி குறிப்பாக யாழ். மாவட்டத்தில் தனித்துவமான இடத்தை பெற்றுவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இன்றும் கூட தகுதிவாய்ந்த 4 டாக்டர்கள் கடமையாற்றி வருகிறார்கள் 11 பெண் தாதிகளும், 5 ஆண் தாதிகளும் இரவு பகலென சேவைபுரிகிறார்கள்.

0 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியில் அமைந்துள்ள இவ்வைத்தியசாலையில் 150 படுக்கைகள் உள்ளன நிரந்தர தற்காலிக ஊழியர்களுட்பட 60 பேர் கடமையாற்றுகிறார்கள். சத்திர சிகிச்சைநிலையம், எக்ஸ்ரேபிரிவு. ஆய்வுகூட வசதிகள், பிரசவவிடுதி, ஆண், பெண் நோயாளர்கள் விடுதிகளுட்பட சகல வசதிகளும் உள்ளன. தற்போது 73 000 ரூபா பெறுமதியான மருந்து வகைகள் கையிருப்பிலுள்ளன.

மேலும் வைத்தியசேவைகளை அதிகரித்து பரந்த ரீதியில் சேவையாற்றவே நிர்வாக சபை நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்

தனியார் மருத்துவக்கல்லூரியும் வைத்திய சேவையும் நடாத்த வடஇலங்கை வைத்திய சங்கத்திற்கு மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை கையளிக்கப்படவிருக்கிறதா என்று கேட்டபோது மருத்துவக் கல்லூரியொன்றை அமைப்பதற்கு வடஇலங்கை வைத்தியர் சங்கம் மேற்படி வைத்தியசாலைக் கட்டிடத்தை கேட்டதாகவும் இதுசம்பந்தமாக நிர்வாக சபை கொள்கை அடிப்படையில் இணக்கம் தெரிவித்ததாகவும் குறிப்பிட்ட அவர் 3873 உறுப்பினர்கள் அங்கத்துவம் வகிக்கும் இவ்வைத்தியசாலையின் பொதுச்சபை அங்கீகாரம் வழங்கிய பின்னரே இது குறித்து திடமான முடிவெடுக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை தற்போது இலாபத்தில் இயங்குகிறதா என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் கடந்தவருடத்துடன் ஒப்பிடும் போது, முன்னைய வருடங்கள் அதிகலாபத்தை ஈட்டித்தந்ததாகவும் ஊழியர்களுக்கு ‘போனஸ்’ வழங்கப்பட்டதாகவும் தெரிவித்த அவர் எக்காலகட்டத்திலும் நிதிப்பிரச்னை ஏற்படவில்லையெனவும் குறிப்பிட்டார். இன்றைய சூழ்நிலை மேலும் அதிக இலாபத்தை ஈட்ட முட்டுக்கட்டையாகவிருக்கிறது என்பதை சுட்டிக்காட்டியதோடு வைத்தியசாலையின் அபிவிருத்தியில் நிர்வாக சபை விழிப்பாக இருப்பதோடு மேலும் அபிவிருத்தி செய்யவே திடசங்கற்பம் பூண்டிருப்பதாகவும் தெரிவித்தார். (ச)

# நெடு நாளாக ஓர் எண்ணம்...!

அடைக்கப்பட்ட
நாற்சுவருக்குள்ளே சாகுமென்
கிழிக்கப்பட்ட
ஆடையின் மறைவிலுள்ள
சிதைக்கப்பட்ட
இவ்வுடலினுள்ளிருக்கும்
நசுக்கப்பட்ட என்மனசுக்கு
நெடுநாளாக ஓர் எண்ணம்......

தூரஎன்னைத் தூக்கி எறிகையில்
தாறு மாறாய் உடைந்த கால்கள்
சற்று குணமடைந்த பின்
எழும்பி நின்று, இந்தக் கண்களால்
இருண்ட சிறையின் சன்னல் வழியே
என் தமிழீழத்தைக் கொஞ்சம்
பார்த்துவிட்டுச் சாகவேண்டுமென்று
நெடுநாளாக ஓர் எண்ணம்.

பாதை வழியே இழுத்து வருகையில்
படிந்த குருதியில் முளைத்த முளைகள்
நாற்றாகி நல் மரமாகி இருப்பதை
நான் பார்த்து விட்டுச் சாக வேண்டுமென்று
நெடுநாளாக ஓர் எண்ணம்.

—முத்துலிங்கம் மதியழகன்

# இன்றைய பலன்

மாதம்: ஆவணி
திகதி: 25 (1985-9-10)
கிழமை: செவ்வாய்
திதி: ஏகாதசி பின் இரவு வரை
நக்ஷத்திரம்: புனர்பூசம் பின் இரவு வரை

மேடம்: புதிய தொழில் மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்குப்பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும்.

இடபம்: வசதிகள் பெருகும். வாழ்க்கையும் வளமாகும் தொழில்துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும். இன்று சுபநாள்.

மிதுனம்: பொருள் துறையில் எதிர்பாராத நெருக்கடி ஏற்படும் புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழில்புரியுமிடத்தில் போட்டி மனப்பான்மையைத் தவிர்த்துக்கொள்ளவும்.

கடகம்: விலை பொருள்களில் பணம் விரயமாகலாம். அதிகசிந்தனை மூலம் சிறிய தலையிடிக்கு இடமுண்டு. அமைதி விரும்பத்தக்கது.

சிங்கம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை ஏற்படுத்தும் குடும்பத்திலும் மகிழ்ச்சி நிலவும் பேச்சில் நிதானம் பெருமை தரும்.

கன்னி: வாழ்க்கை மந்தகதியில் நடைபெறும்: எதிர்பாராத தடைகளால் முன்னேற்றம் பாதிக்கப்படும். சகோதர வழிமூலம் சஞ்சலமான செய்தியுண்டு.

துலாம்: மாணவர்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சிகரமான தினம் கல்வித்துறையில் முன்னேற்றம் உண்டு. தாய்வழி ஆதரவும் கிடைக்கும்.

விருச்சிகம்; புத்திரர் வழியால் புகழ்வந்துசேரும். வெளியூர் புதினமும் உண்டு குடும்பத்திலும் சுமுகமான நிலை தென்படும்

தனுசு: துன்பத்தின் ரேகை படரும். எதற்கெடுத்தாலும் சிறிவிழுவீர்கள். கொடுக்கல் வாங்கல் மூலம் ஏமாற்றமடைய நேரும்.

மகரம்: காதல் விவகாரங்கள் நல்லதாகும். இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். பொருள் வரவிற்கு இடமுண்டு.

கும்பம்; எதிர்பாராத முடிவுகள் ஏமாற்றத்தைத் தரும். எதிரிகளின் சூழ்ச்சி பலமாக இருக்கும் பழைய நினைவுகள் துன்பத்தைக் கொடுக்கும்.

மீனம்: தக்க சமயத்தில் பெரியவர் ஒருவர் ஆதரவு தருவார், தெய்வ நம்பிக்கை மேலிடும் ஸ்தல யாத்திரையொன்றும் மேற்கொள்ளப்படலாம்.

திருமலை
வே ரவீந்திரன்

# வடலியடைப்பில் நடந்த உண்ணாவிரதம்

(யாழ்ப்பாணம்)

வெலிக்கடைச்சிறைச் சாலையில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் தமிழ் இளைஞர்களுக்கு ஆதரவாக வடலியடைப்பு சனசமூக நிலையம் ஒருநாள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடாத்தியது நூற்றுக்கணக்கான ஆண்கள், பெண்கள் இதில் கலந்துகொண்டனர்.

உண்ணாவிரதத்தை மேற்படி நிலையச் செயலாளர் திரு. ஆ. க மதியாபரணம் பால் கொடுத்து முடித்து வைத்தார். கவிஞர் நாராயணன், பேராசிரியர் சின்னத்தம்பி, கலாநிதி பாலபாஸ்கரன் ஆகியோர் உண்ணாவிரதப்போராட்டத்தின் இறுதியில் உரையாற்றினர். (ஐ)

ரே(ா)வெயர் மினி சினிமா
(கல்லூரிவீதி காவிலேசரிக்க அருகில்)
10-30, 3-15, 5-15
சந்திரசேகர் - அம்பிகா நடித்த
நாகம்
பாம்பினதும் நாயினதும் சாகசம் நிறைந்த படம்



ராஜா மினி
சிவச்சந்திரன்
அந்த யூன் 16ம நாள்
(கலர்)
கொலையாளி யார்? என்று கண்டுபிடிக்க முடியாத படி படம் விறுவிறுப்பாக தயாரிக்கப்பட்டுள்ளது.
மர்மம் திரையில்



சரவணபவன் மினி சினிமா
(பெருமாள் கோவிலுக்கும் - வெலிங்டன் சந்திக்கும் இடையில்)
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
Private-Lessons
(கண்டிப்பாக வயது வந்தோருக்கு மட்டும்.



ஸ்ரான்லி மினி
"Ks" திரைவரிசில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
California Girls
அமெரிக்க பெண்களின் பொழுது போக்குகளும் சிறந்த பாடல்களும் நிறைந்த படம்.
Adults only



வெலிங்டன்
10-30, 2-15, 4-15, 6-30, p.m.
26 ம் திகதி மட்டும்
THE STUNT MAN
பயங்கர காட்சிகள் நிறைந்த முதல்படம்.
யாழ்ப்பாணத்தில்,



வின்சர் சினிமா
10-30, 2-30, 6-30
2-வது மாதமாக ஓடுகிறது!
சிவகுமார்,
சிவச்சந்திரன்,
பூர்ணிமா ஜெயராம்,
லக்ஷ்மி, ஜெய்சங்கர் நடித்த
சாஜூ மகேந்திராவின்
நீங்கள் கேட்டவை
வண்ணக் கலர்



லிபேர்ட்டி மினி
10-30, 12-30, 2-30, 4-45, 7-00
Eagles Attack at Dawn
அது ஓர் பயங்கர சிறைக் கூட்டம். அங்கு சிறைப்பட்டிருப்பவர்கள் இஸ்ரேலிய கொமாண்டோக்கள்; தப்பிவிடுகின்றான் ஒருவன். தப்பி ஓடிய கொமாண்டோவினால் சகைதிகளும் விடுவிக்கப்படுவார்கள் என்று சிறைக்கு ராணுவ பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது. இருந்தும் குறிப்பிட்டநேரத்தில் சிறைக்கூடம் உடைக்கப்பட்டு கைதிகள் விடுவிக்கப்படுகின்றனர்; நிமிடத்திற்கு நிமிடம் என்ன நடக்கும் என்று ஏங்கவைக்கும் படம்; தவறவிடாதீர்கள்.


# வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கு வழங்குமாறு கோரிக்கை

(மாவிட்டபுரம்)

யாழ்.மாவட்டத்தில் உருளைக்கிழங்குச் செய்கையை மேற்கொள்வதற்கு வெளிநாட்டு விதைஉருளைக்கிழங்கை பெற்றுத்தருமாறு விவசாயிகள் தமது பகுதி பயிர்ச் செய்கை உத்தியோகத்தர்கள் மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு வடபகுதி விவசாயிகளுக்கு நுவரெலியா விதை உருளைக்கிழங்கே வழங்கப்பட்டதாகவும் இந்த விதை உருளைக்கிழங்கை செய்கை பண்ணி பெரிதும் நஷ்டமடைந்ததாகவும் தெரிவிக்கும் விவசாயிகள் இம்முறை வெளிநாட்டு விதை உருளைக்கிழங்கையே பெற்றுத்தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஊரெழு பகுதிக்கான பயிர்ச் செய்கை உத்தியோகத்தரிடமும் அப்பகுதி விவசாயிகள் இதுபற்றி கோரிக்கை விடுத்ததையடுத்து ஊரெழு பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. சி. சக்திகிரீவன் இவ்விஷயத்தை மேலிடத்தின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.

## யானை தாக்கி ஒருவர் பலி!

(யாழ்ப்பாணம்)

காட்டுக்கு விறகு வெட்டச் சென்ற தொழிலாளி ஒருவரை யானை மிதித்துக் கொன்றுள்ளது. இச்சம்பவம் மாங்குளம் காட்டுபபகுதியில் நிகழ்ந்துள்ளது.

இச்சம்பவத்தில் மாங்குளத்தைச் சேர்ந்த திரு. க. செல்லத்துரை (வயது 42) என்பவர் மரணத்தைத் தழுவிக்கொண்டுள்ளார். (செ)

## இடமாற்றம்

(பண்டத்தரிப்பு)

யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் வே. மாணிக்கம் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் வவனியா பிரதேச சுகாதாரப் பணிப்பாளராக இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

வவனியா பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளராக கடமையாற்றிய டாக்டர் என். கனகசபைஇவரின் இடத்திற்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

## 'களத்தி'லிருந்து சில வரிகள்

அண்மைக் காலத்தில் வெளிவந்த 'களத்தில்' இருந்து சில வரிகளைக் தருகின்றோம்.

''சுதந்திரம் தானே வந்தடைந்து விடாது இது ஒரு கடைச்சரக்குமல்ல, கேட்டு வாங்குவதற்கு. உலகில் விடுதலை அடைந்த (மக்கள் விடுதலை) அனைத்து நாடுகளிலும் மக்கள் தம்மை முழுமையாக அர்ப்பணித்து சொல்லொணு தியாகங்கள் புரிந்து போராடி இரத்த ஆற்றில் மிதந்த பிணக்குவியலின் மேல்நின்று தான் சுதந்திரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.''

### கலைஞர்களுக்கு

'கலைஞர்களே, உங்கள் கலைப்படைப்புகளை ஒடுக்கப்பட்ட மக்களுக்காக உருவாக்குங்கள். அவை மக்களிடையே புரட்சி செய்திகளை எடுத்துச் செல்வனவாய் அமையட்டும் அதற்கு ஆக்கமும் ஒத்துழைப்பும் பங்களிப்பும் செய்ய நாம் எப்பொழுதும் தயாராகவுள்ளோம்.''

### கவிதை

ஓ! எம் பிஞ்சு மலரே
உன் நெஞ்சைக் கிழிக்க
எப்படி அக் கொடியவர்
களால்
— முடிந்ததோ,

நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் 'களத்தில்' மருத்துவம் உண்டு நீரழிவு நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு காளான் நல்ல உணவுப் பொருளாம்.

பல செய்திகள், கேலிச்சித்திரங்கள், படங்களைத்தாங்கி வந்துள்ள 'களத்தில்' மக்கள் மனதில் புதுச்சிந்தனையைத் தூண்டும் அம்சங்கள் நிறைய உண்டு. (பி)


உஷா மினி
10-30, 2-30, 4-45, 6-45
RAMBO
(ஒரிஜினல் பிரதி)


## செக்கோசிலவாக்கிய வீரர் வெற்றி

(நியூயோர்க்)

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் சுற்றுப் போட்டி செக்கோஸ்லவாக்கியாவின் இவான் லென்டில் வெற்றிபெற்றுள்ளார்.

நேற்று முன்தினம் நியூயோர்க்கில் நடைபெற்ற இப்போட்டியில் இவர் தற்போதைய சாம்பியன் ஜோன் மக்கன்ரோவை 7—6, 6—3, 6—4 என்ற கணக்கில் தோற்கடித்தார்.

## மக்கள் ஆதரவு

(பண்டத்தரிப்பு)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ பி ஆர். எல். எப்) 'ஈழம் செய்திப்பலகை'யொன்று பண்டத்தரிப்புச் சந்தியிலும் இடம் பெற்றுள்ளது. பெரும் திரளான மக்கள் வாசித்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

## உண்ணாவிரதம்

(மாவிட்டபுரம்)

மயிலிட்டியில் சிறையில் உண்ணாவிரதம் இருக்கும் இளைஞர்களுக்கு ஆதரவு தெரிவித்து இடம் பெற்ற ஒருநாள் உண்ணாவிரதம் அப்பகுதி மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மயிலிட்டி ஆலய முன்றலில் இடம்பெற்ற இந்த உண்ணாவிரதத்தில் சுமார் 2000 பேர் வரையில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## 'இந்து இளைஞன்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இந்துமதப் பிரசார வெளியீடாக 'இந்து இளைஞன்' எனும் சஞ்சிகையை வெளியிட, யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை முடிவுசெய்துள்ளதாகத் தெரிகிறது.

இம்மாதம் 12-ம் திகதி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரப் பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியுடன் இச்சஞ்சிகை வெளியிடப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஐ)

## கண்டன சுவரொட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அண்மையில் கடத்திச்செல்லப்பட்டு கொலைசெய்யப்பட்ட தமிழர் விடுதலைக்கூட்டணி முன்னாள் எம் பி க்களான திரு. வி. தர்மலிங்கம் திரு. எம். ஆலாலசுந்தரம் ஆகியோரது கொலைகளை கண்டித்து யாழ். குடாநாடெங்கும் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இவர்களின் கொலைக்கு காரணமாயிருந்தவர்களை உடன் கண்டுபிடித்து மக்கள் முன்னிலையில் நிறுத்துங்கள்! என கேட்கப்பட்டிருக்கிறது. சுவரொட்டியின் கீழ் உண்மைத் தமிழ் மக்கள் என எழுதப்பட்டிருக்கிறது. (ச)

# திருமலையில் தொடரும் துயரச் சம்பவங்கள்!

(திருகோணமலை)

திருகோணமலையிலுள்ள உல்லாசப் பிரயாணிகள் விடுதியிலுள்ள மகாலிங்கம் பாஸ்கரலிங்கம் (20-வயது) என்னும் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் துப்பாக்கிச்சூட்டில் மரணமானார்.

அன்புவழிபுரத்தில் வி. அகிலேஸ்வரன் (23-வயது) என்பவர் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபோதிலும் அங்கு தகுந்த வசதிகளின்மையால் அனுராதபுரம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

எஸ். தியாகேஸ்வரன் (20-வயது) என்பவர் ஊர்காவல் படையினரால் தாக்குதலுக்குள்ளாகி படுகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உப்புவெளிக் கிராமத்தில் வீடுகள் எரிப்புச் சம்பவத்தை அறிந்த வயோதிபப் பெண் ஒருவர் அதிர்ச்சியால் மரணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நேற்று 4பேர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்களின் 5-ம் கட்ட உண்ணாவிரதத்தின் 2வது நாளாகிய நேற்று திங்கட்கிழமை உண்ணாவிரதிகளில் நால்வர் மயக்கமடைந்தனர்.

அவர்களில் ஒருவர் 8 தடவைகள் மயக்கமடைந்ததைத் தொடர்ந்து பல்கலைக்கழக சுகாதாரப்பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனைய மூவரும் தாம்தொடர்ந்தும் உண்ணாவிரதத்தில் பங்குபற்ற விருப்பம் தெரிவித்ததன்பேரில் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுவருகின்றனர். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் உண்ணாவிரதிகளின் நலன்களை தொடர்ந்தும் கவனித்துவருகின்றனர்.

★ இன்று கார்த்திகேசன் மாஸ்டர் நினைவு தினம்

## மார்க்ஸிசம் காணுத மனிதாபிமானி

இளமா ணவனாய் இருந்த போதே
புவிஇயல் தன்னில் அறிவின் திறனால்
கிழக்காசியாவில் முதல்வனாய்த் தேறினை,
ஆசிரியத் தொழில் மேவிய காலை
இந்து வென்னும் எழிற் கல்லூரியில்
மாணவர் குலமாம் வண்டினை ஈர்க்கும்
ஞானம் பூவாய் மலர்ந்தனை நீயே,
அரசியல் உலகிற் புகுந்த காலை
கொள்கையில் தெளிவும் வாழ்வினில் நேர்மையும்
நெஞ்சினில் அன்பும் கொண்டே மிளிர்ந்தனை,
மனிதாபிமானம் எனும் சொற்பொருளை
எண்ணிலா நூல்களில் தேடியும் காணகிலேன்,
நின்றன் வாழ்விற் கண்டனன் பண்ப,
மார்க்ஸின் தத்துவ விளக்கம் செய்தோர்
மண்ணிடைப் பற்பலர் ஆயின் நீயோ
தத்துவமாக வாழ்ந்தனை பெரியோய்
உள்ளத் தனையதுயர் வென வள்ளுவன்
உரைத்த உயர்வை நின்பாற் கண்டனன்
ஆங்கிலப் புலமையும் அரசியல் திறமையும்
நகைச்சுவைச் செல்வமும் நினக்கே சொந்தம்
நின்புகழ் என்றும் நிலைத்துள ஒன்றே;

— ம. பார்வதிநாதசிவம்


## ஓராண்டு நினைவஞ்சலி

குலசேகரம் சிவலோகநாதன் (குட்டி)



அன்னையின் மடியில்:
1960—11—21

இறைவனடியில்:
1984—09—10

எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு பாதிவழியில் மறைந்தாலும் உங்கள் நினைவு என்றென்றும் எம்மைவிட்டு மறையாது. அன்புத் தெய்வமே உங்கள் அன்பை நினைவு கூர்ந்து உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் மறைவால் வாடும்:
ஐயா, அம்மா, அக்கா, அண்ணன், தம்பி, மாமா, சின்னம்மா, அத்தான், மருமக்கள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

தண்ணீரூற்று,
முள்ளியவளை- 630

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# "ஆடைகளைக் களைத்துவிட்டு அடித்தார்கள்"

## சிறைஅனுபவம் பற்றி வண.சிங்கராயர்

(கொழும்பு)

"தாடி வைத்த ஒருவர் ஒரு சிட்டை என் முகத்திற்கு நேரே பிடித்தார், சுமார் இரண்டு அல்லது மூன்று நிமிடங்கள் தொடர்ச்சியாக அவர் அந்த சிட்டை அவ்விதம் பிடித்தார். நான் நித்திரை மயக்கத்தில் கண்மூடும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவர் தண்ணீர் தெளித்தார். அத்தோடு நான் நித்திரை கொள்ள எத்தனிக்கும் போதும் அவர் என் பிடரியில் அடித்தார்" என்று வண பிதா ஆபரணம் சிங்கராயர், கொழும்பு மேல் நீதி மன்றத்தில் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்.

அரச தரப்பு சட்டத்தரணி இ. ஆர் டி. சில்வா, குறுக்கு விசாரணை செய்த போது, வண பிதா: சிங்கராயர் மேலும் தெரிவித்ததாவது!

நான் அங்கே கதிரையில் இருக்க மறுத்தபோது அவர் என்னைத் தாக்கினார். அந்த நேரத்தில் நான் காற்சட்டையும் பெனியனும் அணிந்திருந்தேன் அவர் பலவந்தமாக காற்சட்டையை இழுத்தார். காற் சட்டையை இழுத்த போது நான் ஒன்றும் செய்யவில்லை. அது சடுதியாக நடந்த ஒன்று. எனது காற் சட்டை அகற்றப்பட்டு நிர்வாணமாக்கப்பட்டு பின்

(5ம் பக்கம் பார்க்க)

# மரண அறிவித்தல்

## திருமதி எலிசபெத் ஆசிநாதர் (மாணிக்கம்மா)


திருமதி எலிசபெத் (மாணிக்கம்மா) ஆசிநாதர் (இளைப்பாறிய ஆசிரியை) காலமானார். அன்னார் பண்டிதர் க யோ. ஆசிநாதர் அவர்களின் அன்பு மனைவியும், B A ஜெயநாதன், B. E. பரமநாதன் (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), திருமதி லலிதா கிங்சிலி இராசேந்திரம் U K ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr கிங்சிலி இராசேந்திரம் U. K., கொழும்பு திருமதி ஜீன் ஜெயநாதன், திருமதி அமலாமா பரமநாதன் ஆகியோரின் அருமை மாமியாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 11-9-85 புதன்கிழமை காலை 8 மணியளவில் காங்கேசன்துறை ஆசி இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக ஊறணி புனித அந்தோனியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"ஆசி இல்லம்",
3ம் குறுக்குத் தெரு,
காங்கேசன்துறை.

(653)

# மரண அறிவித்தல்

## திரு. ச. கங்கைநாதன்



கொக்குவில் மேற்கு முதலி கோவிலடி தேவாலய ஒழுங்கையைச் சேர்ந்த நீர்வேலி தெற்கு இந்து த க பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு ச. கங்கைநாதன் காலமாகிவிட்டார் இவர் அகிலாண்ட நாயகியின் அன்புக் கணவரும், பிரபல வர்த்தகரும், கைத்தறிப் பிடவை உற்பத்தியாளருமான காலஞ்சென்ற கா. சடையர்-தையல்நாயகியின் மகனும், லிங்கநாதன், சிவலோகநாதன் (பங்காளர்-லிங்கநாதன் and Co, பெரிய கடை, யாழ்ப்பாணம்), லோகநாயகி, கமலநாயகி, ரெங்கநாயகி ஆகியோரின் சகோதரரும், ஜெயரட்ணம் (D D P மன்னார்), விஞசித்தம்பி (ஆசிரியர் நுவரெலியா), தேவருள்ராஜா (கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்), இரத்தினம், நடேசு யோகநாதன் வாணி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து 11-09 1985 புதன் கிழமை காலை 10 மணிக்கு ஈமக்கிரியைகளுக்காகத் தாவடி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். — G S. லிங்கநாதன்

(644)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி. 63-ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 10ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under ramber B 10036/81. Eelananu P. O. Box: 49, Telegram: Eelanabu Telephone: 22389 — 24129

# ஆலாலுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்கம் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில் நேற்றுக்காலை மரண விசாரணை நடைபெற்றது.

சரஸ்வதி மேலும் கூறியதாவது, 'சம்பவத்தினம் வீட்டில் நானும் என் தாயாரும் கணவரும் இருந்தோம். கந்த ரோடையில் ஒரு கலியாண வீட்டிற்கு அன்றுமாலை 6-30 மணிக்கு என் கணவர் சைக்கிலில் சென்றுவிட்டார். இரவு 7-30 மணியளவில் தொலைக்காட்சி பார்ப்பதற்காக என் கணவரின் சகோதர முறையான கு. ரவீந்திரன் வீட்டுக்கு வந்திருந்தார். எல்லோரும் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தோம். எட்டு மணியளவில் வீட்டு வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. ரவீந்திரன் வெளியில் சென்று பார்த்துவிட்டு வந்தார். காருக்குள் ஆலாலசுந்தரம் இருப்பதாகவும், அவர் என் கணவரைக் காணவேண்டும் என்று கூறியதாகவும் சொன்னார்

அவர் கலியாண வீட்டிற்குச் சென்றுள்ளதாகவும் அவரைக் போய்க் கூட்டி வரும்படியும் ரவீந்திரனிடம் சொன்னேன் ரவீந்திரன் அவரைக் கூட்டி வரப்போனார். காருக்குள் எத்தனைபேர் இருந்தார்கள் என்று நான்கவனிக்கவில்லை இருட்டாக இருந்தபடியினால் அவர்களை எனக்குத் தெரியவில்லை ஆலாலசுந்தரம் முன் சீட்டில் இருந்தார்.

பின்னர் ரவீந்திரன் வந்தார் அவர் வந்திட்டாரோ என்று ரவீந்திரனிடம் கேட்டபோது ஆலாலசுந்தரத்துடன் காரில் என் கணவர் போய் கொண்டிருப்பதாக கூறினார். பொதுமக்கள் வந்து இரவு அவரைத் தேடிப்பார்த்தார்கள் மறுநாள் காலை 8-00 மணிக்கு என் கணவரின் சடலத்தை என் சகோதரர்கள் குமாரசாமியும் செல்வராசாவும் கொண்டுவந்தார்கள். அப்போது என் கணவரை சடலமாகக் கண்டேன்.

விசாரணை இம்மாதம் 16-ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது. (க)

# கண்டெடுத்த

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கணவர் நாரிப்பிடிப்பிற்குச் சுடுநீரால் ஒத்தடம் கொடுத்துக் கொண்டிருந்தார் அவர் சாரம் மட்டும் அணிந்திருந்தார்

அப்போது இரண்டு இனந் தெரியாத இளைஞர்கள் வந்தார்கள், "பாலதிக்குளத்திலிருந்து அகதிகளாக வருகின்றோம்" என்று அவர்கள் கூறினார்கள். வெளிநாட்டிற்குச் செல்வதற்கு கடிதம் தருமாறு என் கணவரிடம் கேட்டனர்.

,கிராம சேவகர்களிடமிருந்து கடிதம் கொண்டுவந்திருக்கிறீர்களா? என்று கணவர் அவர்களிடம் கேட்டார்; இப்போது நான் அங்கிருந்து உடைகள் மாற்ற என் அறைக்குச் சென்றுவிட்டேன், பின் திரும்பிவந்து பார்த்தபோது கணவரைக்காணவில்லை, அவர்களையும் காணவில்லை

இரவு முழுவதும் என் கணவர் வரவில்லை. என் சகோதரர்களும் பொது மக்களும் ஓடியாடித்திரிந்து தேடிப்பார்த்தார்கள். மறுநாள்காலை 6 மணிக்கு என் கணவரை ராஜவீதியில் சுட்டுப் போட்டிருப்பதாகச் சொன்னார்கள். பரமேஸ்வரன், ஜெயபாலசிங்கம் ஆகியோர் சென்று காரில் என் கணவரின் சடலத்தை வீட்டிற்குக் கொண்டுவந்தார்கள்.

'இருபக்க நெஞ்சிலும் கையிலும் காயங்கள் இருந்தன. என் கணவர் போனபோது அணிந்திருந்த சாரத்துடன் மட்டும்தான் சடலம் இருந்தது. என்கணவர் ஒரு மோதிரம் அணிந்திருந்தார். சடலத்தில் அந்த மோதிரம் இருந்தது. ஆஸ்பத்திரியில் என்னிடம் தந்தார்கள். அந்த மோதிரம் என்னிடம் இருக்கிறது.'

எம். பரமேஸ்வரனும் சாட்சியமளித்தார். விசாரணை இம்மாதம் 16-ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டுள்ளது. (க)

# ஓர் உருக்கமான வேண்டுகோள்

1-9-85 அன்று இரவு 11-30 மணியளவில் எமது சண்பிரூன் டொபி இனிப்பு வகைகள் தயாரித்து விநியோகிக்கும் அளவை கொன்பக்சனறி வேக்ஸ் தொழில் ஸ்தாபனத்திற்குச் சொந்தமான ரூபா 140.000/- பெறுமதியான 40 ஸ்ரீ 2065 இலக்கமுடைய இசுசு 150 வானை ஆயுதம்தாங்கிய இனந்தெரியாத நான்கு பேர் அடுத்த நாள் காலையில் கொண்டுவந்து தருவதாகக்கூறி வாங்கிச் சென்றார்கள்.

இன்றுவரை வானைத் திருப்பித் தராதபடியால் மேற்படி தொழிற்சாலையில் வேலைசெய்து ஊதியம் பெற்று வாழ்க்கை நடாத்தி வந்த நாங்களும் எங்களைச் சார்ந்திருப்பவர்களும் பட்டினியால் வாட நேரிட்டுள்ளது.

மேற்படி ஸ்தாபனத்தில் உற்பத்தி செய்த பொருட்களை ஊர்கள்தோறும் கொண்டு திரிந்து விற்றுப் பணம்பெற உதவியாய் இருந்தவானை கடத்திச் சென்றமையினால் உற்பத்திப் பொருட்கள் தொழிற்சாலையில் தேங்கிக் கிடக்கின்றன. மேலும் உற்பத்தியை மேற்கொள்ள முடியாததால் வேலையையும் இழந்து வேதனத்தையும் இழந்த நிலையில் துன்பப்படுகின்றோம்.

எனவே ஏழைத் தொழிலாளர்களாகிய எங்கள் மேல் கருணைகூர்ந்து கடத்திச்சென்றவானை உடனடியாக திருப்பித்தந்து எங்கள் அன்றாட வாழ்க்கையை நடாத்த உதவும்படி மிகமிக உருக்கமாகவும் பணிவாகவும் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
தொழிலாளர்கள்.
அளவை கொன்பக்சனறி வேக்ஸ்,
அளவெட்டி.

9-9-1985

650

# பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பணியாளர்களின் பணிவான வேண்டுகோள்

## 21 – 08 – 1985ல் 29 ஸ்ரீ 7780 இலக்க மினிபஸ் கடத்தல்

எமது சங்கத்திற்கு சொந்தமான 29/7780 இல மினிபஸ் 21-08 85 யாழ் நாவலர் வீதியில் வைத்து இனந்தெரியாத இளைஞர்களால் கடத்தப்பட்டுள்ளது பூநகரி வாழ் ஏழைவிவசாய பாட்டாளிமக்களின் சொத்தாகிய மேற்படி மினிபஸ் பூநகரி - சங்குப்பிட்டி சங்குப்பிட்டி-கிளிநொச்சிக்கான சேவைகளைச் செய்துவந்தமை குறிப்பிடத் தக்கதாகும். போக்குவரத்து கஷ்டம் நிறைந்த பூநகரிப்பகுதி மக்கள் 21-8-85ல் இருந்து இதன் சேவையை பெற முடியாத நிலையில் பெரும் கஷ்டத்திற்குள்ளானதுடன் தமது சொத்தை இழந்த கவலையிலும் ஆழ்ந்துள்ளார்கள்;

மக்களுக்காக மக்களுக்கு சேவை செய்ய மக்களால் அமர்த்தப்பட்ட பணியாளர்களாகிய நாம் இம் மினிபஸ்ஸை இழந்ததிலிருந்து மக்களுக்கு சேவையை செய்யமுடியாத நிலையில் உள்ளோம். களவு, கொள்ளை, கதவுடைப்பு, வழிப்பறி போன்றதீய செயற்பாட்டினால் இதுவரை நிதி நிலையில் நலிவுற்ற எமது சங்கத்திற்கு இம்மினிபஸ் கடத்தலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

எனவே மக்கள் நலனில் அதிக அக்கறை கொண்டு உழைக்கும் மக்கள் நலன் விரும்பிகள் மேற்படிமினிபஸ் எங்கிருந்தாலும் மீளப்பெற்றுத் தருமாறு பணிவுடன் பணியாளர்கள் என்ற வகையில் வேண்டி நிற்கிறோம். மீளப் பெறமுடியாத நிலையில்நாம் 16-09-85ல் இருந்து வேலை நிறுத்தத்தில் இறங்கத் தீர்மானித்துள்ளோம்,

இங்ஙனம்
பணியாளர்கள்,
பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பூநகரி.

645

# மரண அறிவித்தல்

## மண்டலநாயகம் பரமானந்தன்

(Mobile Fuel Cooperation Kualalampur)

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாக கொண்டவரும், மலேசியாவில் வசிப்பவருமாகிய காலஞ்சென்ற மண்டலநாயகம் திருமதி இலட்சுமிப் பிள்ளையின் மூத்த மகன் பரமானந்தன் மலேசியாவில் காலமாகிவிட்டார். இவர் தேவியின் அன்புக்கணவரும், கல்யாணு, வாசுகி, கிருபா, கிருபானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி சர்வாம்பிகை நவரத்தினம் பத்மநாதன் Palm Oil Co operation Kualalampur), திருமதி உருக்குமணிதேவி பரமசிவம் Kual lampur, ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற நவரத்தினம் ஜெயசீலன் (Valuation Dept.) கனகநாயகம் (Kuala lanpur) சுந்தரலிங்கம் (Kualalampur), பரமசிவம் (Kualalampur) திருமதி சிவபாக்கியஸ்வரி பத்மநாதன் (Kualalampur ஆகியோரின் மைத்துனரும் சத்தியேந்திரன் நந்தகுமாரி (உஷா U K) சத்தி நந்தா (U K.) உமா Kualalumpur), உஷா Kualalampur) ஆகியோரின் அன்பு மாமனாரும், ரூபாவத்மனி (Kualalampur பெரிய தகப்பனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை கோலாலம்பூரில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி சர்வாம்பிகை நவரத்தினம்,
ஜெயசீலன் தம்பிப்பிள்ளை.

"சரஸ்வதி வாசா"
தெல்லிப்பளை.

(634)